بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9 | இதழ் 9

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்தூர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1445 - ஷஃபான் 18★ ஹிஜ்ரி ஷம்ஸி 1403 - தப்லீஃக் 29
★ 29 பிப்ரவரி 2024

## அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡۤا اِذَا لَقِيۡتُمۡ فِئَةً فَاثۡبُتُوۡا وَاذۡكُرُوا اللّٰهَ كَثِيۡرًا لَّعَلَّكُمۡ تُفۡلِحُوۡنَ ۚ﴿۴۶﴾

**பொருள்**

நம்பிக்கையாளர்களே! நீங்கள் (நிராகரிப்பாளர்களின்) எந்தப் படையைச் சந்தித்தாலும் உறுதியாக நின்று போரிடுங்கள். நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருங்கள்.

(அல் அன்ஃபால் : 46)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறைவனை விட்டு விலகி வாழ்வது என்பதும் நரகமாகும்
## மனிதன் இறைவனை விட்டு விலகி வாழ்வை கழிப்பதால் தான் அவனுக்கு அழிவுகள் வருகின்றன. இறைவனிடத்தில் மனிதன் ஆணவமும் அகந்தையும் கொள்கின்றான். மேலும் மனிதன் அல்லாஹ்வின் கூற்றுகளை கண்ணியப்படுத்துவதும் இல்லை. பொருட்படுத்துவதும் இல்லை

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான
ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இரண்டு பொருட்களின் பரஸ்பர தொடர்பு மற்றும் உராய்வினால் ஒரு வெப்பம் உருவாகின்றது. இதேபோன்று உலகம் மற்றும் உலக பொருட்களின் மீதான மனிதனின் நேசத்தால் இறை நேசம் எரிந்து விடுகின்றது. மேலும் உள்ளம் இருளில் மூழ்கி இறைவனிடமிருந்து வெகு தொலைவில் சென்று விடுகின்றது. மேலும் அவன் ஒரு வகையான நிம்மதியின்மைக்கு இலக்காகிவிடுகின்றான். ஆனால், உலகப் பொருட்களுடன் இருக்கும் தொடர்பானது இறைவனுக்கான ஒரு தொடர்பாக இருக்கும்போதும், அவற்றின் மீதான நேசம் இறை நேசத்தின் அடிப்படையில் அமையும்போதும், அந்நிலையில் பரஸ்பர உராய்வினால் அல்லாஹ் அல்லாதவற்றின் மீதான நேசம் எரிந்து விடுகின்றது. மேலும், அந்த இடத்தில் ஒரு வெளிச்சமும், ஒளியும் நிரம்பி விடுகின்றது. பின்னர் இறைவனின் விருப்பம் அவரது விருப்பமாகவும், அவரது விருப்பம் இறைவனின் விருப்பம் மற்றும் நோக்கமாகவும் ஆகிவிடுகின்றது. இந்த நிலையை அடைந்துவிடும்போதுதான் இறை நேசம் அந்த நபருக்கு உயிராக ஆகிவிடுகின்றது. மனிதர் உயிர் வாழ்வதற்கு வாழ்வதாரங்கள் கண்டிப்பானதாக இருப்பதைப் போன்று அவரது வாழ்விற்கு இறைவன் மட்டுமே அவசியமாகி விடுகின்றான். வேறு வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால் இவ்வாறு கூற முடியும். அதாவது,அவரது மகிழ்ச்சியும், இன்பமும் இறைவனிடத்திலேயே இருக்கின்றது. அதன் பின்னர் ஒருவேளை உலகவாதிகளின் புறமிருந்து அவருக்கு ஏதேனும் துன்பமும், வேதனையும் கூட ஏற்படலாம். ஆனால், அசல் விஷயம் இதுவாகவே இருக்கின்றது. அதாவது, அந்த வேதனையிலும், துன்பத்திலும் கூட அவர் நிம்மதியுடனும், மன நிறைவுடனும் இறை இன்பத்தை பெற்றுக் கொள்கின்றார். அந்த இன்பம் ஓர் உலகவாதியின் பார்வையில் பெரும் பெரும் நபர்களாக இருப்பவர்களுக்கும் கிடைப்பதில்லை.

இதற்கு எதிரில் இருக்கின்ற மனிதன் அடைகின்ற நிலை நரகத்தின் நிலையாகும். ஆக, ஒருவகையில் இறைவனை விட்டு விலகி வாழ்வதும் கூட நரகமாகும்.

ஹதீஸிலிருந்து இந்த விஷயமும் தெரிய வருகின்றது. அதாவது, காய்ச்சலும் கூட நரகத்தின் வெப்பமே ஆகும். மனிதனுக்கு வரக் கூடிய பலதரப்பட்ட நோய்களும், துன்பங்களும் கூட நரகத்தின் முன்மாதிரியே ஆகும். மறுவுலகிற்கான சாட்சியமாகவே இவை அமைகின்றன. மேலும், தீர்ப்பு நாளின் உண்மைத்துவத்திற்கான சான்றாக இவை அமைகின்றன.மேலும், (கிறிஸ்தவ மதத்தின் பாவமன்னிப்பிற்கான) பரிகாரக் கொள்கை போன்ற தவறான விவகாரங்களை ரத்து செய்யும் வகையிலும் இவை அமைந்துள்ளன. உதாரணமாக, தொழு நோயையே எடுத்துக் கொள்ளுங்கள்! உடல் உறுப்புகள் அழுகி விடுகின்றன; உறுப்புகளில் இருந்து சீல் வெளியாகின்றது; குரல் மறைந்து விடுகின்றது, ஒன்று, இதுவோ சுயமே நரகமாகும். பின்னர் மக்கள் (அந்த நபரை) வெறுக்கின்றனர். மேலும் விலகி விடுகின்றனர். நேசத்திலும் நேசம் மிக்க மனைவி, பிள்ளைகள் மற்றும் தாய் தந்தையர் வரை அனைவருமே அவரிடம் இருந்து ஒதுங்கி விடுகின்றனர். சிலரோ குருடர்களாகவும், செவிடர்களாகவும் ஆகிவிடுகின்றனர். மேலும் சில அபாயகரமான நோய்களுக்கு மக்கள் ஆளாகிவிடுகின்றனர். சிறுநீரகக் கற்கள் ஏற்பட்டு விடுகின்றன ; வயிற்றுக்கு உள்ளே கட்டிகள் உருவாகி விடுகின்றன. இந்த அனைத்து அழிவுகளும் மனிதனுக்கு மீது ஏன் வருகின்றன என்றால், அவன் இறைவனிடமிருந்து விலகி வாழ்வை கழிக்கின்றான். மேலும், இறைவனிடத்தில் மனிதன் ஆணவமும், அகந்தையும் கொள்கின்றான். மேலும் அல்லாஹ்வின் கூற்றுகளுக்கு மனிதன் கண்ணியம் அளிப்பதில்லை ; மேலும் பொருட்படுத்துவதில்லை. அந்நிலையில் ஒரு நரகம் உருவாகி விடுகின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 503 -504, காதியான் பதிப்பு, 2018)

## திருக்குர்ஆனில் ஸாஅதுன் என்ற சொல் வெறும் மறுவுலக கியாமத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படவில்லை மாறாக நபிமார்களின் ஜமாஅத்துகளின் முன்னேற்றம் மற்றும் அவர்களுடைய எதிரிகளின் அழிவிற்காகவும் ஸாஅதுன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அல்ஹஜ் எனும் சூராவின் 2வது மற்றும் 3வது வசனங்களின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:** இந்த வசனத்தில் زَلۡزَلَةَ السَّاعَةِ என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து நிராகரிப்பாளர்களுக்கு மறுவுலக வாழ்வில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டனைக் குறித்து கூறப்பட்டுள்ளது என்ற சந்தேகம் மேலோட்டமான பார்வையில் ஒருவருக்கு ஏற்படலாம். ஆனால் இது சரியல்ல என்று திருக்குர்ஆனை (ஆழ்ந்து) படிப்பதன் மூலம் தெரிய வருகின்றது. அதாவது, ஸாஅதுன் என்ற சொல் வெறும் மறுவுலக கியாமத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படவில்லை; மாறாக நபிமார்களின் ஜமாஅத்துகளின் முன்னேற்றம் மற்றும் அவர்களுடைய எதிரிகளின் அழிவிற்காகவும் ஸாஅதுன் என்ற சொல் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வரலாற்றிலிருந்து தெரிய வருகின்றது. அதாவது ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு உடன்படிக்கையை மீறியவாறு மக்கத்து குறைஷிகள் பனூ பக்ர் கோத்திரத்துடன் இணைந்து கொண்டு முஸ்லிம்களுடன் உடன்படிக்கையில் இருந்த பனூ கஸாஆ கோத்திரத்தின் மீது தாக்குதல் நடத்தினர். மேலும், அவர்களுடைய ஏராளமான நபர்களை கொன்றுவிட்டனர். அப்போது, இந்த உடன்படிக்கை மீறுதல் தொடர்பான தகவலை தெரிவிப்பதற்காக பனூ கஸாஆ கோத்திரம், உடனடியாக வேகமாக ஓடக் கூடிய ஒட்டகத்தில் நாற்பது நபர்களை அமர்த்தி மதீனாவிற்கு அனுப்பி வைத்து விட்டது. மேலும், பரஸ்பர உடன்படிக்கைக்கு ஏற்ப தற்போது எங்களுக்காக பழிவாங்குதலை மேற்கொள்ளுங்கள். மேலும் மக்காவின் மீது போர் தொடுங்கள் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் அந்தக் கோத்திரத்தினர் கோரிக்கை வைத்தனர். அந்தக் குழுவினர் தற்போது மதீனாவை வந்தடைந்துதான் இருந்தனர். அதற்குள் அல்லாஹ் கஷ்ஃப் வடிவில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு மக்கா வாசிகளின் அந்த உடன்படிக்கையை முறித்தல் தொடர்பான தகவலை தெரிவித்து விட்டான்.
(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம்-6,காதியான் பதிப்பு 2010)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஹுது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களும் கண்ணியத்திற்குரிய ஸஹாபா பெருமக்களின் உயிர் தியாகங்களைக் குறித்த ஈமானை வலுவூட்டக் கூடிய நற்குறிப்புகளும்**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே தமது இரத்தத்தை துடைத்துக் கொண்டே சென்றார்கள். மேலும்,

كَيْفَ يُفْلِحُ قَوْمٌ شَجُّوْا نَبِيَّهُمْ وَ كَسَرُوْا رَبَاعِيَتَهٗ
وَهُوَ يَدْعُوْهُمْ إِلَى اللّٰهِ

என்று கூறிக் கொண்டே சென்றார்கள். பொருள்: தன்னுடைய நபியைக் காயமடையச் செய்த அவருடைய நான்காவது பல்லை உடைத்த அந்த சமுதாயம் எப்படி வெற்றி பெற முடியும்? அவரோ அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றார்.

ஒருமுறை எப்படிப்பட்ட ஒரு தருணம் வந்தது என்றால், அப்போது பனிரெண்டு கூட அல்ல ; வெறும் மூன்று நபர்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி எஞ்சியிருந்தனர். மேலும், நிராகரிப்பாளர்கள் குறிப்பாக இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது அம்புகளை எய்யத் தொடங்கிவிட்டனர். ஆனால் அபாயகரமான சூழல் இருந்தபோதிலும் எதிரிக்கு எதிராக அன்னார் (ஸல்) தொடர்ச்சியாக நிலைத்து நின்றார்கள். மேலும் தமது இடத்திலிருந்து அசையவில்லை

**பாலஸ்தீனத்தின் அநீதியிழைக்கப்பட்ட மக்களுக்காகவும் துஆ செய்வதற்கான தொடர் அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 ஜனவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **19ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

உஹுது போர் பற்றிக் கூறப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக மேற்கொண்டு எடுத்துக் கூறுவேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள் என்று எதிரி அறிவிப்பு செய்தது குறித்து முன்னரும் கூறப்பட்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டதாக கூறப்பட்ட இந்த செய்தியை எவன் பரப்பி இருந்தானோ அதனை முஸ்லிம்கள் கேட்டதும் முஸ்லிம்களின் நிலை என்ன ஆனது ?என்பதைப் பற்றிய விளக்கத்தில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஷஹீது ஆக்கி விட்டதாக இப்னு கமிய்யா கருதியபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகி விட்டார்கள் என்று அவன் அறிவிப்பு செய்து விட்டான். அறிவிப்பு செய்தவன் ஷைத்தான் என்றும், அவன் ஜுஆல் அல்லது ஜுஅய்ல் பின் ஸுராக்கா அவர்களின் வடிவத்தில் இருந்தான் என்றும் கூறப்படுகின்றது. ஜுஆல் ஆரம்ப காலத்தின் நற்செயல் புரியக் கூடிய முஸ்லிம்களில் ஒருவராக இருந்தார்கள். திண்ணைத் தோழர்களில் ஒருவராகவும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அகழ்ப் போரின் போது அவர்களின் பெயரை மாற்றி உமர் என்று வைத்து விட்டிருந்தார்கள். எவ்வாறு இருப்பினும், இதைக் கேள்விப்பட்ட மக்கள் ஜுஆல் அவர்களைக் கொல்வதற்காக அவர்கள் மீது பாய்ந்தார்கள். ஆனால், அவர்கள் நான் எந்த அறிவிப்பையும் செய்யவில்லையே என்று கூறியவாறு தமக்கும் இந்த அறிவிப்புக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதையும், தாம் குற்றமற்றவர் என்பதையும் வெளிப்படுத்தினார்கள். மேலும், இந்த அறிவிப்பு செய்யப்பட்டபோது, அவர்கள் தமக்கு அருகில் ஒரு பக்கத்தில் சண்டையிட்டுக் கொண்டிருந்ததாக கவ்வாத் பின் ஜுபைர் மற்றும் அபூ புர்தஃ (ரலி) ஆகியோர் சாட்சி பகர்ந்தனர்.

இவரோ என்னுடன் இணைந்து எதிரியுடன் சண்டையிட்டுக் கொண்டு தான் இருந்தார் என்று அவர்கள் கூறினர். அறிவிப்பு செய்தவன் அஸப்புல் அகபா என்றும் கூறப்படுகின்றது. முஹம்மது (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள் என்று மூன்று முறை அவன் அறிவிப்பு செய்தான். மேலும், அறிவிப்பு செய்தது யார்? என்பது பற்றி பல கூற்றுகள் உள்ளன. ஒருவேளை பல்வேறு மக்கள் பல்வேறு விதத்தில் பார்த்து இருக்கலாம். பல நபர்கள் (அந்த அறிவிப்பை) செய்திருக்கலாம். அதாவது, இப்னு கமிய்யா, இப்லீஸ் மற்றும் அஸப்புல் அகபா ஆகியோரில் ஒவ்வொருவரும் அறிவிப்பு செய்திருக்கலாம். எவ்வாறு இருப்பினும் ஷைத்தானிய இயல்பு உடைய ஒரு மனிதன்தான் இவ்வாறு அறிவிப்பு செய்திருக்கக் கூடும்.

இந்த செய்தி பரவியதுமே முஸ்லிம்கள் சிலர் கூறினார்கள்: இப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள்; எனவே நீங்கள் உங்களுடைய சமுதாயத்திடம் திரும்பிச் செல்லுங்கள். அவர்கள் உங்களுக்கு உயிருக்குப் பாதுகாப்பு வழங்குவார்கள்.

இதைக் கேட்ட பிறகு சில மக்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள் என்றால் நீங்கள் ஷஹீது ஆகி உங்கள் இறைவனுக்கு முன் ஆஜராகும் வரை உங்களுடைய நபி (ஸல்) அவர்களின் மார்க்கம் மற்றும் அன்னார் கொண்டு வந்த தூதுச் செய்திக்காகப் போரிட மாட்டீர்களா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஸாபித் பின் தஹ்தாஹ் (ரலி) அவர்கள் அன்ஸார் சஹாபிகளிடம் கூறினார்கள்:

அன்ஸார் கூட்டத்தினரே! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள் என்றால், எல்லாம் வல்ல அல்லாஹ் உயிருடன் இருக்கின்றான். அவனுக்கு மரணம் ஏற்பட முடியாது. உங்களுடைய மார்க்கத்திற்காகப் போரிடுங்கள்; எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களுக்கு வெற்றியை வழங்கக் கூடியவனாக இருக்கின்றான். இதைக் கேட்டதும் அன்ஸாரி முஸ்லிம்களின் ஒரு கூட்டம் எழுந்தது. அவர்கள் ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்களுடன் இணைந்து இணை வைப்பாளர்களின் அந்தக் கூட்டத்தின் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள்.

அந்தக் கூட்டத்தில் காலித் பின் வலீத், இக்ரிமா பின் அபீ ஜஹ்ல், அம்ர் பின் ஆஸ் மற்றும் ஸிரார் பின் கத்தாப் ஆகியோர் இருந்தனர். முஸ்லிம்களின் இந்த சிறிய ஜமாஅத் தாக்குதல் தொடுப்பதைப் பார்த்து, காலித் பின் வலீத் கடுமையாக பதில் தாக்குதல் தொடுத்தார். எனவே ஹஸ்ரத் ஸாபித் பின் தஹ்தஹ் (ரலி) அவர்களையும் மற்றும் அவர்களின் அன்ஸாரி தோழர்களையும் ஷஹீது ஆக்கி விட்டார். மிகவும் மோசமாக இருந்த இந்த நிலைமையைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீனில் எழுதியுள்ளார்கள். அது இவ்வாறு வருகின்றது. அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்:

அப்பொழுது முஸ்லிம்கள் மூன்று பாகங்களாகப் பிரிந்திருந்தார்கள். ஒரு குழுவோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு போர்க் களத்தில் இருந்து ஓடிவிட்டது. ஆனால், இந்தக் குழு மிகவும் குறைவாக இருந்தது. அந்த மக்களில் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள்.

ஆனால், திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி அந்த நேரத்தின் குறிப்பிட்ட நிலைமைகள், அம்மக்களின் உள்ளத்து ஈமான் மற்றும் தூயத் தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான். அந்த மக்களில் சிலர் மதீனாவை வரை சென்றடைந்தார்கள். இவ்வாறு மதீனாவிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) கருத்து மற்றும் இஸ்லாமியப் படை தோல்வியடைந்த செய்தி சென்றடைந்து விட்டது. அதனால் நகரம் முழுவதிலும் ஓர் அமளி ஏற்பட்டு விட்டது. முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் மிகவும் பதற்றமடைந்த நிலையில் நகரத்திலிருந்து வெளியேறி வந்து, உஹது (போர்க்) களத்தை நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். சிலரோ வேகமாக ஓடியவாறு போர்க் களத்தை சென்றடைந்தார்கள். அல்லாஹ்வின் பெயரைக் கூறி பகைவர்களின் படைகளுக்குள் நுழைந்து விட்டார்கள். அதாவது, அவர்கள் போரிட ஆரம்பித்து விட்டார்கள்.

இரண்டாவது குழுவில் இருந்தவர்கள் ஓடிவிடவில்லைதான்; எனினும், ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு ஒன்று துணிவிழந்து அமர்ந்து விட்டிருந்தார்கள். அல்லது இனி சண்டையிடுவதை வீணானதாகக் கருதினார்கள். எனவே போர்க் களத்திலிருந்து ஒருபுறம் அகன்று கவலைத் தோய்ந்து அமர்ந்து விட்டார்கள்.

மூன்றாவது குழுவோ தொடர்ச்சியாகப் போரிட்டுக் கொண்டிருந்தது. அவர்களில் சிலரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்றுகூடியிருந்தார்கள். மேலும், வாழ்வை அர்ப்பணித்தலின் நிகரில்லா திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலானவர்களோ போர்க் களத்தில் கலைந்து போய் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கும், இரண்டாவது குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிரோடு இருப்பது தெரிய வர, தெரிய வர அந்த (ஸஹாபா பெரு) மக்கள் பித்தர்களைப் போன்று போரிட்டவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒன்று கூடி வந்தனர். அப்பொழுது போரின் நிலைமை எப்படி இருந்ததென்றால், குறைஷியர்களின் படை கடலின் அச்சுறுத்தும் அலைகளைப் போன்று நாலாப் பக்கங்களிலிருந்தும் முன்னேறி வந்து கொண்டிருந்தது. மேலும் போர்க் களத்தில் எல்லாப் புறத்திலிருந்தும் அம்புகளும், கற்களும் மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன. வாழ்வை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் இந்த ஆபத்தான நிலைமையைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி வட்டமிட்டு அன்னாருடைய அருளுக்குரிய உடலைத் தங்களுடைய உடல்களால் மறைத்துக் கொண்டார்கள். இருந்தும் கூட, தாக்குதலின் பொறி கிளம்பியபோதெல்லாம் இந்த விரல் விட்டு எண்ணக் கூடிய சில மக்கள் அக்கம் பக்கம் தள்ளி விடப்பட்டு வந்தார்கள். இத்தகைய நிலைமையில் சிலவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிட்டத்தட்ட தனியாக இருந்து விடுவார்கள்.

இப்படிப்பட்ட ஒரு தருணத்திலேயே ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுடைய இணை வைப்பாளனாக இருந்த சகோதரன் உத்பா பின் அபீ வக்காஸ் எறிந்த ஒரு கல் அன்னாருடைய அருளுக்குரிய முகத்தில் பட்டது. அதனால் அன்னாருடைய அருளுக்குரிய பல் உடைந்து விட்டது. உதடும் காயமடைந்தது. அதிக நேரம் கூட ஆகியிருக்காது. அதற்குள் அப்துல்லாஹ் பின் ஷிஹாப் எறிந்த மற்றொரு கல் அன்னாருடைய நெற்றியைக் காயப்படுத்தியது. அதற்குள் சிறிது நேரத்திற்குப் பிறகு, இப்னு கமிய்யா எறிந்த மூன்றாவது கல் அன்னாருடைய அருளுக்குரிய கன்னத்தில் வந்து பட்டது.

அதனால் அன்னாருடைய மஃக்ஃபர் அதாவது, இரும்புத் தலைக் கவசத்தின் இரண்டு இரும்புச் சங்கிலிகள் அன்னாருடைய கன்னத்தில் குத்திக் கொண்டு இருந்து விட்டன. ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுக்குத் தன் சகோதரன் உத்பாவின் இந்த செயலால் எந்த அளவுக்குக் கோபம் இருந்தது என்றால், அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: உஹது நாளன்று உத்பாவைக் கொல்ல வேண்டும் என்று எனக்கு இருந்த அந்த உத்வேகத்தின் அளவை விட அதிகமாக ஓர் எதிரியைக் கொல்வதற்காக ஒருபோதும் உத்வேகம் ஏற்படவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலில் உள்ள தத்துவம் பற்றிய கருத்தை எடுத்துரைக்கின்றார்கள். இதை எடுத்துரைத்தவாறு ஒரு நீண்ட விளக்கத்துடன் அன்னார் (ரலி) உஹதின் இந்த சம்பவத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். இதை எடுத்துக் கூறிவாறு அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

ஆங்கிலேய சமுதாயம் உண்மையான உள்ளத்துடன் ஏகத்துவத்தில் நிலை நின்று என்னிடம் துஆவிற்காக விண்ணப்பித்தால் அதற்கு வெற்றி கிடைக்கும் என்று நான் கூறினேனே! இது 1940-ல் இரண்டாம் உலகப் போரின்போது நடந்த விஷயம் ஆகும். அல்லது.........சரி! எவ்வாறு இருப்பினும், அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இந்த மக்கள் என்னிடம் துஆவுக்காக விண்ணப்பித்தால் அதற்கு வெற்றி கிடைக்கும். இது சரியாக இறைவனின் முன்னறிவிப்புகள் அவனுடைய கூற்று மற்றும் நான் கண்ட உண்மையான கனவுகளுக்கு ஏற்ப ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சமுதாயத்துக்காகப் பல துஆக்கள் செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த சமுதாயத்தினர் இறைவனின் அரியணையில் ஓர் அடியாரை அமர வைத்திருக்கின்றார்கள். எனவேதான் இறைவன் அவர்களை சோதனையில் ஆழ்த்துகின்றான்.

அதாவது, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவனின் மகனாக ஆக்கி வைத்திருக்கின்றார்கள். எனவே இந்த மக்கள் சோதனைகளில் ஆழ்ந்துள்ளார்கள். இவர்களுக்காக அதிக துஆக்கள் செய்யப்பட்டுள்ளன.

பிறகு, அன்னார் (ரலி) லாஹூரிகளைப் பற்றி கூறினார்கள்: லாஹூரிகள் நிராகரித்தால் தாராளமாக நிராகரிக்கட்டும்; அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துக் கூறக் கூடிய விஷயத்துக்கு முற்றிலும், மாற்றமானதாக லாஹூரிகள் கண்ணோட்டம் இருக்கின்றது.

எவ்வாறு இருப்பினும், அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவர்கள் தொடர்பாக செய்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தடையாக அவர்களின் இணை வைத்தலே உள்ளது. இந்தத் தடை ஓரளவோ அல்லது முழுமையாகவோ அகன்று விட்டால், இந்த துஆக்கள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விடும்.

என்னுடைய துஆக்களால் இவர்களின் இன்னல்கள் விலக முடியும் என்பது போன்ற பல உண்மையான கனவுகளை நான் கண்டுள்ளேன். ஆனால், இதற்கு அர்த்தம், நான் என்ன துஆ செய்கிறேனோ அது கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதல்ல. இது எனது ஆதிக்கத்தில் இருந்தால், நமக்கு ஏற்படும் அந்தத் துன்பங்களை நான் ஏன் வராமல் ஆக்கி விடுவதில்லை. திருக்குர்ஆனில் இவ்வாறு உள்ளது: நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நீர் இறைவனுக்கு இந்த அளவுக்குப் பிடித்தமானவர் என்றால், ஏன் உம்முடைய இன்ன பணி நடந்து விடுவதில்லை? என்று கேட்டு வந்தார்கள். ஆனால், எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்: முஹம்மதே! (ஸல்) அவர்களிடம் கூறுவீராக! எனது ஆதிக்கத்தில் இருந்திருந்தால் நான் எல்லா நன்மைகளையும் எனக்காகவே ஒன்று திரட்டி இருந்திருக்க மாட்டேனா?

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கே அன்னாரின் ஒவ்வொரு துஆவும் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற இந்த் நியதி இல்லாமல் இருந்தபோது, எனக்கு எப்படி இருக்க முடியும்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகவும் இவ்வாறுதான் இறை நியதி இருந்தது. அதாவது எல்லாம் வல்ல இறைவன் துஆவை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கும்போதும், ஏதாவது ஓர் அடையாளம் மூலமாக அன்னாருடைய கண்ணியத்தை நிலைநாட்ட விரும்பும்போதும் அவன் கண்டிப்பாக ஏற்றுக் கொள்கிறான். எனவே, எனக்காகவோ அல்லது வேறு ஒருவருக்காகவோ அதற்கு மாற்றமாக எப்படி நடக்க முடியும்?

விரும்பினால் நமக்குத் தூக்குத் தண்டனை கொடுத்து விடுவதோ அல்லது நம்மை சிறைபிடித்து விடுவதோ ஆங்கிலேயர்களின் ஆற்றலில் உள்ளது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இப்பொழுது அவர்கள் எதிரிக்கு முன்னிலையில் பலவீனமானவர்களாகத் தென்படுகின்றார்கள்.

உலகப் போரில் அப்பொழுது அவர்களின் நிலை மிகவும் மோசமானதாக இருந்தது.ஆனால், அவ்வாறிருந்தும் எனது துஆவால் அவர்களுடைய சிரமங்கள் அகல முடியும் என்பது எனது வாதமாகும். ஏனெனில், ஆங்கிலேயர்கள் நம்முடைய உயிர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது வேறு நியதியின் கீழ் உள்ளது. மேலும், இது தொடர்பாக துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் வேறு சட்டத்தின் கீழ் உள்ளது.

ஈரான் பேரரசன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பிடிக்க எண்ணினான். ஆனால், பிடிப்பவர்கள் கூட வந்திருக்கவில்லை ; தூதுச் செய்தியை மட்டும் எடுத்துக் கொண்டு ஏமனின் ஆளுநரின் ஆட்கள் தான் வந்தடைந்திருந்தார்கள். ஆனால், அன்னார் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்: சென்று உங்கள் எஜமானனிடம் நாம் வரவில்லை என்று கூறுங்கள். உங்கள் இறைவனை எனது இறைவன் கொன்று விட்டான்.

எல்லாம் வல்ல இறைவன் அந்த அரசனின் மகனை இயக்கினான். அவன் தன் தந்தையைக் கொன்று விட்டான். ஆனால், உஹது போரில் எதிரி அன்னார் (ஸல்) மீது தாக்குதல் தொடுத்தான். கற்களை எறிந்தான். அன்னாருடைய பற்கள் உடைந்து விட்டன. தலை காயமடைந்தது. இரும்புத் தலைக் கவசத்தின் ஆணிகள் தலையில் குத்தி விட்டன. அன்னார் (ஸல்) மயங்கி விழுந்தார்கள். அன்னார் (ஸல்) மீது இன்னும் சில ஸஹாபா பெருமக்கள் விழுந்தார்கள். அன்னார் (ஸல்) ஷஹீது ஆகிவிட்டார்கள் என்று ஸஹாபிகள் கருதினர்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்காக ஈரானின் பேரரசனை அவ்வளவு தொலைவில் மரணிக்க வைத்து விட்டான். அந்த அளவுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு அன்னாரின் கண்ணியம் விருப்பமானதாக இருந்தது என்றால், ஏன் அவன் உஹது போர்க் களத்தில் நிராகரிப்பாளர்களை அன்னார் (ஸல்) மீது இப்படி கல் எறிய விட்டான்? என்று இப்பொழுது ஒருவர் கூறினால், இவ்வாறு ஆட்சேபனைகள் செய்வது சரியல்ல. இவை எல்லாம் வல்ல அல்லாஹ் சந்தர்ப்ப சூழ்நிலைக்குப் பொருத்தமாகவும், நுட்பமாகவும் செய்பவை ஆகும். இவை இரகசியங்கள் ஆகும். சில சந்தர்ப்பங்களில் அவன் சின்ன விஷயத்தில் பிடித்து விடுகிறான். சிலவேளை மனிதனின் இயலாமையும், திறமையின்மையும் வெளிப்பட வேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு நன்மையைக் கருதி கால அவகாசம் கொடுக்கின்றான். எவ்வாறு இருப்பினும், இந்த சம்பவம் போய் கொண்டிருக்கிறது. கொலை செய்யப்பட்டதாக வதந்தி பரவிய பிறகு திடீரென்று ஸஹாபா பெருமக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் தரிசித்தார்கள். இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அந்த நேரத்தில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை, அன்னார் உயிருடன் நலமாக இருக்கின்றார்கள் என்று எல்லாருக்கும் முதலாக அடையாளம் கண்டு கொண்ட முதலாம் நபர் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அன்னாருடைய கண்கள் காரணமாக அடையாளம் கண்டு கொண்டேன். அவை தலைக் கவசத்தின் கீழ் ஒளிமிக்கவையாகவும், ஒளி தரக்கூடியவையாகவும் தென்பட்டுக் கொண்டிருந்தன. ஃஹோது (இரும்புத் தலைக் கவசம்) என்பது போரின்போது போர் வீரர்கள் தலை மற்றும் முகத்தைப் பாதுகாப்பதற்காக அணியக் கூடிய உட்புறம் காலியாக இருக்கக் கூடிய ஓர் இரும்புப் பொருளாகும்.

எவ்வாறு இருப்பினும், அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: எனக்கு கண்களில் மிகவும் ஒளியும், பிரகாசமும் தென்பட்டுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்று எனக்குத் தெரிந்து விட்டது. எனவே நான் அன்னாரை அடையாளம் கண்டு கொண்டதுமே முழு ஆற்றலுடன், முஸ்லிம்களே! உங்களுக்கு நற்செய்தி! இதோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் (உயிருடன்) இருக்கின்றார்கள் என்று கத்தினேன். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என் பக்கம் சைகை செய்து அமைதியாக இரு! என்று என்னைத் தடுத்தார்கள். எல்லாருக்கும் முதலாக வேறு ஒரு ஸஹாபி தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அடையாளம் கண்டு கொண்டார் என்று மற்றோர் அறிவிப்பில் வருகின்றது.

ஆக, ஓர் எழுத்தாளர் எழுதுகின்றார்

பள்ளத்தில் விழுந்த பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முழு தேகத்திலும் இரத்தம் வழிந்திருந்தது. போர்க் கவசங்களுக்கிடையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்களை வைத்து ஹுஸூர் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் கஃப் பின் மாலிக் (ரலி) அவர்கள் அடையாளம் கண்டு கொண்டு விட்டார்கள். மகிழ்ச்சியுடன் இவ்வாறு உரக்க கத்தினார்கள்: يَا مَعْشَرَ الْمُسْلِمِينَ، أَبْشِرُوا هٰذَا رَسُولُ اللهِ

முஸ்லிம்களின் கூட்டமே! மகிழ்ச்சி அடையுங்கள்; இதோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள்.

இதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை அமைதியாக இருக்குமாறு சைகையில் கூறினார்கள். ஆனால், முஸ்லிம்களுக்குத் தகவல் கிடைக்க அனைவரும் அன்னாரை நோக்கி ஓடி வந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஸிம்மா (ரலி) அவர்கள் மற்றும் மற்ற முஸ்லிம்களும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்முடைய அந்த ஸஹாபா பெருமக்களுடன் உஹூது மலையின் எவ்வளவு தாக்குதல் தொடுத்தார்களோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோழர்கள் அவற்றிற்கு நன்றாக மூக்கறுக்கக் கூடிய பதிலடி கொடுத்தார்கள். சில நூல்களில் இவ்வாறு உள்ளது:

போரின் திசை திரும்பியதன் காரணமாக சூழ்நிலை இக்கட்டானதாகவும் எடுத்துரைக்க முடியாததாகவும் ஆகிவிட்டிருந்தது. திடீரென்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸஃது பின் உபாதா (ரலி) அவர்கள் ஆகியோருக்கு நடுவில் தோன்றினார்கள். நாங்கள் அன்னாருடைய நடையை வைத்து அன்னாரை அடையாளம் கண்டு கொண்டோம். அப்பொழுது எங்கள் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்கவில்லை. எங்களுக்கு எந்தத் தோல்வியும் ஏற்படாதது போன்றும், எங்களுக்கு எந்த இழப்பும் ஏற்படாதது போன்றும் இருந்தது.

முஸ்லிம்கள் அனைவரும் அன்னாரைக் கண்டு அடையாளம் கண்டு கொண்டதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி விட்டில் பூச்சிகளைப் போன்று ஒன்று கூடி விட்டார்கள். அன்னார் (ஸல்), அவர்கள் அனைவரையும் உடன் அழைத்துக் கொண்டு ஒரு பள்ளத்தாக்கை நோக்கி புறப்பட்டார்கள். அப்பொழுது அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஸிம்மா (ரலி) அவர்கள் ஆகியோர் இருந்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்தத் தாக்குதல் முஸ்லிம்களுக்கு முற்றிலும் எதிர்பாராத விதமாக இருந்தது. எனவே அவர்களுக்குக் கடும் பதற்றம் ஏற்பட்டது. சிதறிப் போயிருந்ததன் காரணத்தினால் அவர்களால் எதிரிகளை எதிர்த்துப் போரிட முடியவில்லை. நிராகரிப்பாளர்கள் போர்க் களத்தைக் கைப்பற்றி விட்டார்கள். பெரும்பாலான ஸஹாபா பெருமக்கள் சிதறுண்டுபோய், பதற்றமடைந்த நிலையில் மதீனாவை நோக்கி ஓடினார்கள். எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி வெறும் 12 ஸஹாபிகளே எஞ்சி இருந்தனர்.

ஒரு நேரத்தில் 12 பேர் கூட அல்லாமல், வெறும் 3 பேர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி இருந்து விட்டார்கள். காஃபிர்கள் குறிப்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அம்பு எறிய ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், இந்த இக்கட்டான நிலைமைகள் இருந்தும் அன்னார் (ஸல்) தொடர்ச்சியாக எதிரிக்கு எதிரில் நின்று கொண்டிருந்தார்கள். மேலும், தமது இடத்தை விட்டு நகரவில்லை.

கடைசியில் எதிரி திடீரென்று தாக்குதல் தொடுத்து தள்ளி விட்டான். அந்த சில மக்களும் தள்ளி விடப்பட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காயமுற்று ஒரு பள்ளத்தில் விழுந்து விட்டார்கள். அன்னாரைப் பாதுகாத்துக் கொண்டிருந்த மற்ற சில ஸஹாபா ஷஹீது ஆகி அன்னார் மீது விழுந்தார்கள். இவ்வாறு சிறிது நேரத்திற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளின் பார்வையில் இருந்து மறைந்து விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டதாக படையில் வதந்தி பரவி விட்டது.

ஸஹாபிகளுக்கு இந்த செய்தி இன்னும் கவலை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்தது. எஞ்சியிருந்த அவர்களின் துணிவும் அகல ஆரம்பித்தது. அப்பொழுது அன்னாருக்கு அருகில் உயிருடன் இருந்த ஸஹாபா சடலங்களை விலக்கி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பள்ளத்தில் இருந்து வெளியே கொண்டு வந்தார்கள். மேலும் பாதுகாப்பிற்காக அன்னாருக்கு பக்கம் நின்று கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இணை வைப்பாளர்களின் முற்றுகையிலிருந்து வெளியேறி வாழ்வை அர்ப்பணிக்கக் கூடிய தம் மக்களுடன் பள்ளத்தாக்கின் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது உஸ்மான் பின் அப்தில்லாஹ் பின் முகீரா ஒரு கருப்பு வெள்ளை நிறக் குதிரையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி முன்னேறினான். அவன் தலை முதல் கால் வரை கவசம் அணிந்திருந்தான். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்று கொண்டிருந்த அந்தப் பள்ளத்தாக்கை நோக்கி அவன் முன்னேறிக் கொண்டிருந்தான். ஒன்று அவர்கள் உயிருடன் இருப்பார்கள் அல்லது நான்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

உயிருடன் இருப்பேன் என்று அவன் கூறிக் கொண்டிருந்தான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனுடைய குரலைக் கேட்டு நின்று விட்டார்கள். அப்பொழுது அங்கு தோண்டப் பட்டிருந்த பள்ளங்களில் ஒரு பள்ளத்தில் உஸ்மானின் குதிரை தடுமாறியது மேலும், (அங்கு பள்ளம் தோண்டப்பட்டிருந்தது) அவன் அதில் விழுந்து விட்டான். அப்பொழுது ஹஸ்ரத் ஹாரிஸ் (ரலி) அவர்கள் அவன் பக்கம் பாய்ந்தார்கள். சிறிது நேரம் இருவருக்கு இடையிலும் வாள் வீச்சு நடைபெற்றது. திடீரென்று ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஸிம்மா (ரலி) அவர்கள் அவன் காலில் வாள் வீசினார்கள். அந்தக் காயத்தினால் உஸ்மான் உடனே உட்கார்ந்து விட்டான். அப்பொழுது ஹஸ்ரத் ஹாரிஸ் (ரலி) அவர்கள் அவனுடைய கதையை முடித்து விட்டார்கள். மேலும், அவனுடைய கவசத்தையும் தலைக் கவசத்தையும் அவிழ்த்து விட்டார்கள்.

இதைப் பார்த்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவனை அழித்த இறைவனுக்கு நன்றி! அதே நேரத்தில் உபைதுல்லாஹ் பின் ஜாபிர் ஆமிரீ ஹஸ்ரத் ஹாரிஸ் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டான். அவர்களுடைய நெற்றியின் மீது வாள் வீசி அவர்களைக் காயமடையச் செய்து விட்டான். ஹஸ்ரத் ஹாரிஸ் (ரலி) அவர்களின் தோழர்கள் அன்னாரைத் தூக்கிச் சென்று விட்டனர். அத்துடன் ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் விரைவாக உபைதுல்லாஹ்வைத் தாக்கினார்கள். மேலும், அவனைத் தமது வாளால் கொன்று விட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்து விட்டார்கள்.

மக்காவின் ஒரு தலைவன் உபை பின் ஃஹல்ஃப் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தது பற்றியும் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பள்ளத்தாக்கின் பக்கம் சென்று கொண்டிருந்தபோது அங்கு உபை பின் ஃஹல்ஃப் வந்து விட்டான். உபை பின் ஃஹல்ஃப் பத்ர் யுத்தத்தில் சிறை பிடிக்கப்பட்டதற்காக ஈட்டுத் தொகை செலுத்தியிருந்தான். அவன் கூறினான்: என்னிடம் ஊது எனும் குதிரை இருக்கின்றது. அதற்கு நான் தினமும் ஒரு ஃபரக் அளவு அதாவது ஏழரை கிலோ சோளம் உண்ணக் கொடுக்கின்றேன். (அதாவது) மிகவும் ஆற்றல் படைத்தது; ஆரோக்கியமானது. நான் அதில் பயணித்து முஹம்மது (ஸல்) அவர்களைக் கொல்வேன்.

அவன் கூறிய இந்த விஷயம் அன்னாரை எட்டியபோது, இல்லை! மாறாக நான் அவனைக் கொல்வேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அவன் இந்த விஷயத்தை ஹிஜ்ரத்துக்கு முன்னர் கண்ணியத்திற்குரிய மக்காவில் அன்னாரிடம் கூறியதாக ஒரு கூற்று உள்ளது.

ஆக, உஹது போர் நடைபெற்ற போது, எல்லாரையும் விட கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரிய ஸஹாபா பெருமக்களிடம், உபை பின் ஹலஃப் எனக்கு பின்னாலிருந்து என் மீது தாக்குதல் தொடுப்பான் என்று நான் நினைக்கின்றேன். நீங்கள் அவனைப் பார்க்கும்போது என்னிடம் கூறிவிடுங்கள் என்று கூறினார்கள்.

அவன் கவசம் அணிந்து கொண்டு குதிரையை வேகமாக ஓட்டி வந்து கொண்டிருந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவனைப் பார்த்து விட்டார்கள். முஹம்மது (ஸல்)) அவர்கள் எங்கே? ஒருவேளை அவர் தப்பித்து விட்டார் என்றால், நான் தப்ப முடியாது என்று அவன் கூறிக் கொண்டிருந்தான்.

ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் அவனுக்கு முன்னால் வந்து விட்டார்கள். அவர்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களைத் பாதுகாத்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களை ஷஹீது ஆக்கி விட்டான்.

ஸஹாபா பெருமக்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உபை தங்கள் பக்கம் வந்து கொண்டிருக்கிறேன். தாங்கள் விரும்பினால் எங்களில் ஒருவர் அவனுடைய கதையை முடித்து விடுகிறோம் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். மற்ற அறிவிப்பில் வருகிறது: ஸஹாபா பெருமக்கள் அவனுக்கு முன்னால் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனை விட்டு விடுங்கள்; அவன் வழியிலிருந்து விலகி விடுங்கள் என்று கூறினார்கள்.

அவன் அன்னாருக்கு அருகில் வந்ததும், பெரும் பொய்யனே! எங்கு தப்பி ஓடுகிறாய்? என்று அன்னார்(ஸல்) கூறினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஸிம்மா (ரலி) அவர்களிடம் இருந்து ஈட்டியை வாங்கினார்கள். மற்றொரு கூற்றிற்கு ஏற்ப ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களிடம் ஈட்டியை வாங்கினார்கள். அன்னார் உடலை சற்று அசைத்தார்கள். ஒட்டகத்தின் இடுப்பிலிருந்து ஈக்கள் விலகுவது போன்று ஸஹாபா பெருமக்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களை விட்டு விலகி விட்டார்கள். அன்னார் உபைக்கு முன்னால் வந்தார்கள். அவன் கழுத்தில் ஈட்டியால் குத்தினார்கள் அல்லது தலைக் கவசம் மற்றும் உடற்கவசத்துக்கு இடையில் தென்படக் கூடிய இடத்தில் ஈட்டியால் குத்தினார்கள். அதன் காரணமாக, அவன் தனது குதிரையில் இருந்து பலமுறை கீழே சரிந்தான். அவன் எருதைப் போன்று ஏப்பம் விட ஆரம்பித்தான். அவன் கழுத்தில் சாதாரணமான கீரல் வந்தது. அவன் இரத்தம் நின்று விட்டது அல்லது அவன் விலா எலும்புகளில் ஓர் எலும்பு உடைந்து விட்டது.

அவன் தன் சமுதாயத்திடம் திரும்பிச் சென்று, இறைவன் மீது ஆணையாக! என்னை அரேபியர் முஹம்மது ((ஸல்) அவர்கள்) கொன்று விட்டார் என்று கூறினான்.

சமுதாயம் அவனிடம், உன் மனம் உடைந்து விட்டது. இறைவன் மீது ஆணையாக! உனக்கு ஒன்றும் ஆகவில்லை. இது சாதாரண கீரல் தான். எங்களில் ஒருவருக்க கண்ணில் இந்த அளவு காயம் ஏற்பட்டாலும் அவருக்கு ஒன்றும் ஆகாது என்று கூறியது. அவன் கூறினான்: நான் லாத் மற்றும் உஸ்ஸா சிலைகள் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எனக்கு ஏற்பட்ட காயம் ஸூல் மிஜாஸ் அல்லது ரபீஆ மற்றும் மஸர் கோத்திரங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அனைவரும் மரணித்துப் போயிருப்பார்கள். நான் உன்னைக் கொல்வேன் என்று அவர் (அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்), என்னிடம் மக்காவில் கூறினார். இறைவன் மீது ஆணையாக! ஒருவேளை அவர் (அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்) என் மீது உமிழ்ந்திருந்தாலும் நான் மரணித்திருப்பேன். இணை வைப்பாளர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, இவன் சரிஃப் எனும் இடத்தில் நரகத்தைச் சென்றடைந்தான். சரிஃப் ஒரு பெரிய பள்ளத்தாக்காகும். அதை இன்றைய காலத்தில் நவாரியா என்கிறார்கள். ஹஜ்ஜத்துல் விதாவில் இது மதீனாவில் இருந்து அன்னாருக்கு ஏழாவது பயண இடமாக இருந்தது. இது தன்ஈமுக்கு அருகில் மக்காவிலிருந்து 9 அல்லது 10 மைல் தொலைவில் உள்ளது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்: குறைஷியர்கள் சற்று பின்னால் விலகியதும், போர்க் களத்தில் இருந்த முஸ்லிம்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அடையாளம் கண்டு கொண்டு அன்னாரைச் சுற்றி ஒன்று திரண்டதும், அன்னார் தம்முடைய அந்த ஸஹாபிகளுடன் சேர்ந்து மெல்ல,மெல்ல மலை மீது ஏறி ஒரு பாதுகாப்பான குன்றைச் சென்றடைந்தார்கள். வழியில் மக்காவின் ஒரு தலைவன் உபை பின் ஃஹல்ஃபின் பார்வை அன்னார் மீது பட்டது. அவன் உள்ளப் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியில் குருடனாகி (அதாவது, முஹம்மது ((ஸல்) அவர்கள்) தப்பி ஓடி விட்டார் என்றால், நான் தப்பவில்லை) என்ற சொற்களைக் கூறிக் கொண்டே அன்னார் பக்கம் ஓடினான்.

ஸஹாபிகள் அவனைத் தடுக்க நினைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவனை விட்டு விடுங்கள்: என் பக்கம் வர விடுங்கள். அவன் அன்னார் மீது தாக்குதல் தொடுக்கும் நோக்கத்தில் அன்னாருக்கு அருகில் வந்து சேர்ந்தபோது, அன்னார் ஓர் ஈட்டியை எடுத்து அவன் மீது வீசினார்கள். அதனால் அவன் தலைச் சுற்றி மண்ணில் விழுந்தான். பிறகு எழுந்து கத்திக் கதறிக் கொண்டே திரும்பிச் சென்று விட்டான். வெளிப்படையில் காயம் பெரிதானதாக இருக்கவில்லை. ஆனால், மக்கா சென்றடைவதற்கு முன்னால் அவன் மண்ணோடு மண்ணாகி விட்டான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்முடைய ஸஹாபிகளுடன் பள்ளத்தாக்கைச் சென்றடைந்தார்கள். அதைப் பற்றி இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆனதாக செய்யப்பட்ட அறிவிப்பு மற்றும் சில மக்கள் சிதறி போனது ஆகியவற்றிற்குப் பிறகு எல்லாருக்கும் முதலாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஹஸ்ரத் கஅப் பின் மாலிக்(ரலி) அவர்களின் பார்வை பட்டது. அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் தலைக் கவசத்துக்கு நடுவில் அன்னாருடைய ஒளிரக் கூடிய கண்களைப் பார்த்து உரத்த குரலில், முஸ்லிம்களே! மகிழ்ச்சி அடைந்து விடுங்கள்! இதோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருக்கிறார்கள் என்று கத்தினேன். இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அமைதியாக இரு! என்று கையால் சைகை செய்தார்கள். முஸ்லிம்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பள்ளத்தாக்கின் பக்கம் புறப்பட்டுச் சென்றார்கள்.

அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம்

(ரலி) அவர்கள் மற்றும் ஹாரிஸ் பின் ஸிம்மா (ரலி) அவர்கள் ஆகிய ஸஹாபா பெருமக்கள் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளின் கூட்டத்துடன் அந்தப் பாதையின் மீது நின்று கொண்டிருந்தபோது, திடீரென்று குறைஷியர்களின் ஒரு கூட்டம் மலை மீது சேர்ந்து விட்டது. அந்தக் கூட்டத்தில் காலித் பின் வலீதும் இருந்தார். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதிரியை மேலே கண்டு இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ اِنَّهٗ لَا يَنْبَغِيْ لَهُمْ اَنْ يَعْلُوْنَا، اَللّٰهُمَّ لَا قُوَّةَ لَنَا اِلَّا بِكَ

பொருள்: அல்லாஹ்வே! அவர்கள் எங்கள் மீது மேலோங்குவது அவர்களுக்கு ஆகுமானதல்ல. அல்லாஹ்வே! உன் மூலமாகவே அன்றி எங்களுக்கு ஆற்றலும் பலமும் இல்லை.

அதே சமயத்தில் ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள் முஹாஜிர்களின் ஒரு குழுவுடன் அந்த மக்களை எதிர்த்துப் போட்டியிட்டார்கள். அவர்களைப் பின்னால் தள்ளி விட்டு மலைக் குன்றை விட்டு கீழிறங்குமாறு நிர்பந்தித்து விட்டார்கள். ஸீரத் காத்தமுன்னபிய்யீனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மலைக் குன்றை சென்றடைந்ததும், காலித் பின் வலீத் தலைமையில் குறைஷியர்களின் ஒரு படைக் குழு மலை மீது ஏறி தாக்குதல் தொடுக்க நினைத்தது. ஆனால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சில முஹாஜிர்களை உடன் அழைத்துக் கொண்டு அதை எதிர்த்துப் போரிட்டு அதைப் பின்னுக்குத் தள்ளி விட்டார்கள். இந்தப் போரின் சம்பவத்தின் ஓர் அறிவிப்பு ஒரு வரலாற்றில் இவ்வாறு காணக் கிடைக்கின்றது. ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹூது நாளன்று இரண்டு கவசங்களை அணிந்திருந்தார்கள். அன்னார் பாறை மீது ஏற நினைத்தார்கள். ஆனால், கவசங்களின் எடையின் காரணமாகவும், தலை மற்றும் முகத்தில் காயத்தால் இரத்தம் வழிந்ததன் காரணமாகவும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பலவீனம் ஏற்பட்டு விட்டது. எனவே அன்னாரால் பாறை மீது ஏற முடியவில்லை. எனவே ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கீழே அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்னார் மீது காலை வைத்து பாறை மீது ஏறினார்கள்.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அப்பொழுது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தல்ஹா தன் மீது சொர்க்கத்தைக் கடமையாக்கிக் கொண்டார் என்று கூறக் கேட்டேன். ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பள்ளத்தாக்கில் இருந்த பாறையின் மீது செல்ல நினைத்தார்கள். ஆனால், அன்னார் ஏற ஆரம்பித்தபோது அருளுக்குரிய தலையில் இருந்த காயத்தில் இருந்து இரத்தம் வழிந்து வந்ததன் காரணமாகவும், பலவீனம் காரணமாகவும் ஆற்றல் ஒத்துழைக்கவில்லை. பிறகு, அத்துடன் அன்னாருடைய உடலில் இரண்டு கவசங்களின் சுமை இருந்தது. இதைப் பார்த்து ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் விரைவாக அன்னாருக்கு முன் அமர்ந்து விட்டார்கள். மேலும், அன்னாரைத் தோளில் அமர வைத்து பாறைக்கு மேல் தூக்கிச் சென்றார்கள்.

அப்பொழுதுதான் தல்ஹாவின் இந்த நற்செயல் காரணமாக அவர்களுக்கு சொர்க்கம் கடமையாகி விட்டது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஏற்கனவே கூறப்பட்டது போன்று இந்தப் போரிலேயே ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பல்லும் ஷஹீது ஆனது. அப்பொழுது இருந்தக் காட்சியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அது பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஹது நாளைப் பற்றி கூறுகையில் அந்த நாள் முழுக்க முழுக்க தல்ஹாவுடைய நாளாக இருந்தது என்று கூறுவார்கள். பிறகு, இவ்வாறு அதன் விளக்கத்தை கூறுவார்கள்: உஹது நாளன்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்த மக்களில் நானும் ஒருவனாக நான் இருந்தேன். ஒருவர் அன்னாரைப் பாதுகாத்தவாறு போரிட்டுக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்.

அவர் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் காத்துக் கொண்டிருந்தார் என்று அன்னார் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதாக நான் நினைக்கின்றேன் என்று அறிவிப்பாளர் கூறுகிறார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அது தல்ஹாவாக இருக்க வேண்டுமே! என்று நான் கூறினேன். எனக்கு சந்தர்ப்பம் நழுவி விட்டது; நழுவி விட்டதுதான். எனினும் அந்த நபர் எனது சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவராக இருக்க வேண்டும்! அவ்வாறு இருந்தால் அது எனக்கு அதிகம் பிடித்தமானதாக இருக்கும் என்று நான் எனது உள்ளத்தில் கூறினேன்.

அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு யோசித்தார்கள்.

எனக்கும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் நடுவில் ஒரு நபர் இருந்தார். அவரை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால், நான் அவரை விட ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அதிகம் அருகில் இருந்தேன். அவர் எவ்வளவு வேகமாக நடந்து கொண்டிருந்தார் என்றால், அவ்வளவு வேகமாக என்னால் நடக்க முடியாமல் இருந்தது. அப்போது அவர் அபூ உபைதா பின் ஜர்ராஹ் என்பதை நான் பார்த்தேன். அதாவது இரு நபர்கள் இருந்தனர். ஹஸ்ரத் தல்ஹாவும் அங்கு இருந்தார்கள். உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். பிறகு, நான் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றடைந்தேன். அன்னாருடைய (தாடையின்) முன்வாய் பற்களில் இரு பற்களுக்கும், கோரைப் பல்லுக்கும் நடுவில் இருந்த கீழ்ப்பற்களில் நான்காவது பல் உடைந்து விட்டிருந்தது. முகம் காயமுற்றிருந்தது. அன்னாருடைய அருளுக்குரிய கன்னத்தில இரும்புத் தலைக் கவசத்தின் சங்கிலியின் கண்ணிகள் புதைந்துவிட்டிருந்தன. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இருவரும் உங்களுடைய தோழருக்கு உதவி செய்யுங்கள்.

இதன் மூலம் அன்னார் ஸல்) தல்ஹாவைப் பற்றி கூறினார்கள்: அவர்களுக்கு அதிகம் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாதுகாத்தவாறு மிகவும் அதிகமாக காயமடைந்து விட்டிருந்தார்கள்.ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், என்னை கவனியுங்கள் என்று கூறுவதற்கு பதிலாக, தல்ஹாவைப் போய் பாருங்கள்! என்று கூறினார்கள். நாங்கள் அவரை விட்டு விட்டோம்; நான் முன்னால் சென்றேன். அதாவது, ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் பக்கம் கவனம் செலுத்தவில்லை. மாறாக, இரும்புத் தலைக் கவசத்தின் சங்கிலியின் கண்ணிகளை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தில் இருந்து வெளியே எடுக்கும் பொருட்டு, நாங்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பக்கம் கவனம் செலுத்தினோம்.எனவே, நீங்கள் எனக்காக விட்டு விடுங்கள் என்று நான் உங்களுக்கு இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! என்று ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே நான் அவருக்காக அதனை விட்டு விட்டேன். இந்த சங்கிலியின் கண்ணிகளை நான் எடுப்பேன் என்று அபூ உபைதா கேட்டுக் கொண்டதற்கு இணங்க அன்னார் (ரலி) பின்னால் விலகி விட்டார்கள்.

அந்த சங்கிலியின் கண்ணிகளை கையால் இழுத்து வெளியே எடுத்து, அதனால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் துன்பம் ஏற்படுவதை அபூ உபைதா விரும்பவில்லை. எனவே அன்னார் அந்த சங்கிலியின் கண்ணிகளைத் தமது வாயால் எடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். ஒரு சங்கிலியின் கண்ணியை எடுத்ததும் சங்கிலியுடன் சேர்த்து அன்னாருடைய முன் பல்லும் உடைந்து விட்டது. பிறகு, நானும் அன்னார் செய்தது போன்றே செய்கிறேன் என்று இரண்டாவது சங்கிலியின் கண்ணியை வெளியே எடுப்பதற்காக முன்னால் சென்றேன். ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் அவரிடம், நானும் இதேபோன்று மற்றொரு சங்கிலியின் கண்ணியை வெளியே எடுப்பதற்கு முயற்சி செய்கிறேன் என்று கூறினேன். அப்பொழுது அபூ உபைதா மீண்டும் கூறினார்:

நீங்கள் இதனை எனக்காக விட்டு விடுங்கள்! என்று நான் உங்களுக்கு இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அதாவது, இரண்டாவது சங்கிலியையும் நான் தான் எடுப்பேன்; நீங்கள் எடுக்கக் கூடாது. இவ்வாறு அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: அன்னார் (ரலி) மீண்டும் பின்னால் சென்று விட்டார்கள். பிறகு, அவர்கள் தாம் முதலில் செய்தது போன்றே செய்தார்கள். அபூ உபைதா (ரலி) அவர்களின் முன் பக்கத்தின் இன்னொரு பல்லும் சங்கிலியுடன் சேர்ந்து உடைந்து விட்டது. அபூ உபைதா (ரலி) முன் பற்கள் உடைந்த மக்களில் எல்லாரையும் விட அழகானவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்:

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பிறகு, நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு சிகிச்சை அளித்து முடித்த பிறகு தல்ஹாவிடம் சென்றோம். அவர் ஒரு பள்ளத்தில் இருந்தார். பார்த்தபோது, அவரது உடலில் ஈட்டிகள், வாள்கள் மற்றும் அம்புகளின் ஏறக்குறைய 70 காயங்கள் இருந்தன. அவரது விரலும் வெட்டுப்பட்டிருந்தது. எனவே நாங்கள் அவற்றிற்கு களிம்பு இட்டு கட்டினோம்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் மட்டுமின்றி ஹஸ்ரத் உக்பா பின் வஹப் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பற்றியும் அவர்கள் இந்த சங்கிலிகளை வெளியே எடுத்தார்கள் என்று அறிவிப்பு கிடைக்கின்றது. ஆனால், எவ்வாறு இருப்பினும், முதல் அறிவிப்பு அதிகம் சிறந்ததாகும்.

ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தில் இருந்து இரண்டு சங்கிலியின் கண்ணிகள் வெளியே எடுக்கப்பட்டபோது, நிரம்பிய தண்ணீர்ப் பையில் இருந்து தண்ணீர் வெளி வருவது போன்று இரத்தம் வழிந்தது. மாலிக் பின் ஸினான் அவர்கள் இரத்தத்தைத் தமது வாயால் உறிஞ்ச ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், நீ இரத்தை அருந்துகிறாயா? என்று கேட்டார்கள். அவர் ஆமாம் என்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவருடைய இரத்தத்தை என்னுடைய இரத்தம் தொட்டு விட்டதோ அவரை நெருப்பு தொடாது.

இது ஸுபுலுல் ஹுதா வர்ரஷாதின் அறிவிப்பாகும். ஆனால், இந்த அறிவிப்பு ஆராய வேண்டியதாக உள்ளது. இவர்களுக்கிடையில் சில அறிவிப்புகள் பார்வையிட வேண்டியவையாகும். எவ்வாறு இருப்பினும், இது எந்த அளவுக்கு உண்மை என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஏனெனில், இவ்வாறு இரத்தத்தை நிறுத்தினால், இவ்வாறோ இரத்தம் நிற்பதற்கு பதிலாக இவற்றால் இன்னும் அதிகம் இரத்தம் வழியும். மேலும், அதிகம் பலவீனம் ஏற்படும். எவ்வாறு இருப்பினும், மேற்கொண்டு அடுத்த அறிவிப்புகளில் இதற்கான பதிலும் வந்து விடுகிறது. எனவே இந்த அறிவிப்பு அவ்வளவு நம்பிக்கைக்குரியதல்ல.

பிறகு, எழுதப்பட்டுள்ளது: உஹுது போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக புகாரியின் அறிவிப்பு இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஸஃது (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காயத்தைப் பற்றி கேட்கப்பட்டது. என்னிடம் கேட்கிறீர்கள் என்றால், அல்லாஹ்வின் மீது ஆணையாக! யார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காயத்தைக் கழுவிக் கொண்டிருந்தார்? யார் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்? என்ன மருந்து போடப் பட்டது? என நான் நன்றாக அறிவேன். அதாவது, முழு காட்சியும் என் கண் முன் நிற்கிறது (என்று கூறினார்கள்).

ஹஸ்ரத் ஸஹ்ல் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் காயத்தைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கேடயத்தால் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். தண்ணீர் இன்னும் அதிகம் இரத்தத்தை வெளியேற்றுகிறது என்பதை ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் பார்த்தபோது, அவர்கள் சாக்குப்பையின் ஒரு துண்டை எடுத்து அதை எரித்து அதை சேர்த்து ஒட்டி விட்டார்கள். அதனால் இரத்தம் நின்று விட்டது. அந்த நாளில் அன்னாரின் முன் பல்லும் உடைந்து விட்டிருந்தது. அன்னாருடைய முகம் காயமடைந்து விட்டது. அன்னாருடைய தலைக் கவசம் அன்னாரது தலையில் உடைந்து இருந்து விட்டது. இங்கு இரத்தத்தை நிறுத்தியது மற்றும் கழுவியது பற்றிக் கூறப்பட்டுள்ளது. உறிஞ்சியதாக எதுவும் கூறப்படவில்லை. புகாரியின் இந்த அறிவிப்பே சரியானது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பள்ளத்தாக்கின் முகப்பு வரை சென்றடைந்ததும், அலீ பின் அபீ தாலிப் அவர்கள் மீராஸின் தண்ணீரால் தம்முடைய கேடயத்தை நிறைத்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள். உஹுது மலையில் எந்த சிறிய பெரிய பள்ளங்களில் மழை தண்ணீர் தேங்கி விடுமோ அந்தப் பள்ளங்களின் பெயர் தான் மீராஸ் என்பதாகும். மீராஸின் தண்ணீர் என்பதன் விளக்கத்தில் இது எழுதப்பட்டுள்ளது:

இந்த இடம் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீது ஆன அந்த இடத்திற்கு அருகில் இருந்த இடமாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதை அருந்துவதற்காக அது கொண்டு வரப்பட்டது. ஆனால், அதன் துர்நாற்றம் காரணமாக ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்கள் அதை அருந்தவில்லை. தமது முகத்தில் இருந்து இரத்தத்தைக் கழுவிக் கொண்டார்கள். மேலும், தம் தலை மீது ஊற்றினார்கள். பிறகு, கூறினார்கள்: எவர் அல்லாஹ்வின் நபியின் முகத்தைக் காயமடையச் செய்து விடுகிறாரோ அவர் மீது அல்லாஹ் கடும் கோபம் கொள்கிறான்.

முஹம்மது பின் மஸ்லமா பெண்களிடம் தண்ணீர் கேட்கச் சென்றார்கள். அவர்களிடம் தண்ணீர் இருக்கவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டிருந்தது. எனவே, முஹம்மது பின் மஸ்லமா ஒரு நீரூற்றுக்குச் சென்றார்கள். அங்கிருந்து இனிமையான தண்ணீரை எடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தத் தண்ணீரை அருந்தி அவருக்கு நன்மைக்கான துஆ செய்தார்கள். தபரானீயில் ஸஹ்ல் பின் ஸஃது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளி மிகுந்த முகம் உஹுது நாளன்று காயமடைந்து விட்டது. அன்னாரின் அருளுக்குரிய பற்கள் ஷஹீது ஆகி விட்டன. மேலும், இரும்புத் தலைக் கவசம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய தலையில் உடைந்து (இருந்து) விட்டது. இணை வைப்பாளர்கள் சென்று விட்ட பிறகு, பெண்கள் ஸஹாபா பெருமக்களிடம் வந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களும் இருந்தார்கள்.

அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சந்தித்தபோது அவர்களைக் கட்டியணைத்துக் கொண்டார்கள். மேலும், அன்னாரின் காயங்களைக் கழுவ ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கேடயத்தின் மூலமாக தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இரத்தம் அதிகம் வழிந்தபோது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் விரிப்பின் சிறு பகுதியை எரித்து சாம்பலாக்கிக் கொண்டார்கள். அதை வைத்து காயத்தில் ஒத்தடம் கொடுத்தார்கள். எதுவரை என்றால், அது காயத்துடன் கலந்து விட்டது. இரத்தம் நின்று விட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே தமது இரத்தத்தை துடைத்துக் கொண்டே சென்றார்கள். மேலும், இவ்வாறு கூறிக் கொண்டே சென்றார்கள்:

كَيْفَ يُفْلِحُ قَوْمٌ شَجُّوْا نَبِيَّهُمْ وَ كَسَرُوْا رَبَاعِيَتَهٗ
وَهُوَ يَدْعُوْهُمْ إِلَى اللّٰهِ

அதாவது தன்னுடைய நபியைக் காயமடையச் செய்த அவருடைய நான்காவது பல்லை உடைத்த அந்த சமுதாயம் எப்படி வெற்றி பெற முடியும்? அவரோ அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றார்.

மற்றவை இனி எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ். பாலஸ்தீனத்திற்காக நான் துஆக்களுக்காக கூறிக் கொண்டே இருக்கின்றேன். இப்பொழுது முஸ்லிம் நாடுகளின் நிலை எப்படி ஆகி விட்டது என்றால், அனைவரும் ஒன்று சேர்ந்து பாலஸ்தீனத்தைக் காப்பாற்றுவது பற்றி கவலை படுவதற்கு பதிலாக முஸ்லிம்களே சண்டை போட்டுக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இப்பொழுது பாகிஸ்தான் மற்றும் ஈரானிலும் சச்சரவு ஆரம்பித்து விட்டதாக கேள்விப்படுகிறேன். இவர்கள் ஒருவர் மற்றவர் மீது குண்டுகளும் வீசி வருகின்றனர். ஆக, இந்த பயங்கரமான நிலைமை உருவாகிக் கொண்டிருக்கின்றது.

எல்லாம் வல்ல அல்லாஹ்தான் இந்த முஸ்லிம் நாடுகளுக்கு, தலைவர்களுக்கு அறிவையும் புரிதலையும் வழங்க வேண்டும். அவர்களுக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் உண்மையில், அவர்களுக்குத் தங்களுடைய நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும், அவர்கள் ஒரே உம்மத்தாக ஆகக் கூடியவர்களாக இருப்பார்களாக!

தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா தொழுகையையும் நான் தொழ வைப்பேன். ஜனாஸா காயிபாகும். முதலாவது ஸய்யது தாவூத் முஸஃபர் ஷாஹ் ஸாஹிபின் மகனான ஸய்யிது மௌலூது அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையது ஆகும். அவர்கள் கடந்த நாட்களில் 73 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மற்றும் ஸய்யிதா உம்மே தாஹிர் ஸாஹிபாவின் மகள் வழிப் பேரரும், ஸாஹிப்ஸாதி அமத்துல் ஹகீம் ஸாஹிபா மற்றும் ஸய்யித் தாவூத் முஸஃப்பர் ஷாஹ் ஸாஹிபின் மகனுமாவார்கள். அல்லாஹ்வின் அருளினால் மூஸியாக இருந்தார்கள். என் தாயின் சகோதரியுடைய மகனாகவும் இருந்தார்கள். மேலும், என் மனைவியின் அண்ணனாகவும் இருந்தார்கள். ஸய்யித் அப்துஸ் ஸத்தார் ஸாஹிப் ஷாஹ் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகனான ஸய்யித் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் மர்ஹூமின் பாட்டனார் ஆவார்கள்.

ஹஸ்ரத் டாக்டர் ஸய்யத் அப்துஸ் ஸத்தார் ஸாஹிப்(ரலி) அவர்களிடம் தக்வா மற்றும் தூய்மையைப் பேணுதல் மிகவும் உச்சத்தை அடைந்திருந்தது. அவர்களிடம் மிகவும் பணிவும், தன்னடக்கமும் இருந்தது. அவர்கள் இறைவனுக்குரிய உரிமைகள்

மற்றும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதில் மிகவும் முன்னேறி இருந்தார்கள்.

அப்துஸ் ஸத்தார் ஷாஹ் ஸாஹிப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் ஒரு சம்பவத்தை எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் தம்மிடம் டாக்டர் ஸய்யித் அப்துஸ் ஸத்தார் ஷாஹ் ஸாஹிப் அவர்களே கூறியதாக கூறுகின்றார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மிக அதிகமாக நோய்வாய்பட்டிருந்தார்கள். இது இவர்கள் ஹுஸுர் (அலை) அவர்களின் இல்லத்தில் வாழ்ந்து வந்த காலத்தின் விஷயம் ஆகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஆடுகளை ஸதக்கா கொடுத்தார்கள்.

டாக்டர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: நானும் அங்கு இருந்தேன். நான் இரவில் ஹஸ்ரத் முதலாவது கலீஃபா (ரலி) அவர்களுடன் இருந்தேன். காலையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்தார்கள். அப்பொழுது ஹுஸுர்! டாக்டர் ஸாஹிப் முழு இரவும் என் அருகில் கண் விழித்து இருந்தார்கள். மேலும், முறையாக மருந்து போன்றவற்றைக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள் என்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயத்தினால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும் எமக்கும் இவர்கள் மீது பெருமிதம் ஏற்படுகிறது. இது சொர்க்கத்திற்குரிய குடும்பம் ஆகும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தச் சொற்களை சிலமுறை கூறினார்கள். ஹஸ்ரத் டாக்டர் அப்துஸ் ஸத்தார் ஸாஹிப் அவர்கள் தொடர்பாக மீண்டும், மீண்டும் கூறினார்கள்.

ஸய்யிது மௌலூத் ஷாஹ் ஸாஹிப் ரப்வாவில் கல்வி பயின்றார்கள். மெட்ரிக் படித்தார்கள். எஃப் எஸ் சி முடித்தார்கள். பிறகு, இவர்களுக்கு லாஹுரில் பொறியியல் கல்லூரியில் பல்கலைக் கழகத்தில் சேர்க்கை கிடைத்தது. Mechanical Engineering இல் பட்டம் பெற்றார்கள். பாகிஸ்தானிலும் பல்வேறு கம்பெனிகளில் பணியாற்றினார்கள். பிறகு சில ஆண்டுகளுக்கு நைஜீரியாவிலும் ஒரு கம்பெனியில் இன்ஜீனியராக பணியாற்ற சென்றார்கள். அங்கு பணியாற்றினார்கள். அல்லாஹ்வின் அருளினால் நல்ல வாழ்க்கையைக் கழித்தார்கள்.

இவர்களுடைய நிக்காஹ்வை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நடத்தியபோது, அதில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் வழங்கிய குத்பாவில் கூறினார்கள்: கணவன், மனைவி உறவு மரத்தில் ஒட்டுப் போட்டதைப் போன்றதாகும். அதை ஆரம்பத்தில் மிகவும் பாதுகாத்து வைக்க வேண்டி வருகின்றது.

இந்த சில பழைய நிக்காஹ் குத்பாக்களை நான் ஏன் வாசித்து விடுகின்றேன் என்றால், நாங்கள் எப்படி நல்ல முறையில் திருமண உறவுகளைப் பேணுவது ? என்று பல மக்கள் கேள்வி கேட்கின்றார்கள். ஆக, இவை வழிகாட்டல்கள் ஆகும். இவற்றை கருத்தில் கொள்ளுங்கள். சுருக்கமாக இருக்கின்றன. எனவே, நான் சிலவேளை குத்பாக்களில் எடுத்துக் கூறி விடுகின்றேன். நிக்காஹ்களில் சிலசமயங்களில் கடந்த கலீஃபாக்களின் இந்த வழிகாட்டல்களையும் வழங்கி விடுகின்றேன்.

எவ்வாறு இருப்பினும், அன்னார் கூறுகின்றார்கள்: இவற்றை ஆரம்பத்திலேயே மிகவும் பாதுகாத்து வைக்க வேண்டி வருகின்றது. திருக்குர்ஆனின் வழிகாட்டல்படி இந்த ஒட்டுப் போடுதலை நேரான உண்மையான பேச்சு எனும் நூலால் கட்டி வைக்க வேண்டி வருகின்றது. அதாவது, உண்மை முற்றிலும் முழுமையான உண்மை என்ற நூலினால் கட்டி வைக்க வேண்டி வருகிறது. அப்பொழுதுதான் இது பாதுகாக்கப்படுகிறது.

இதற்கான பொறுப்பு கணவன் மனைவியாகிய இருவர் மீது மட்டுமல்ல ; அதையும் தாண்டி அவர்களுடைய குடும்பங்கள் மீது, அவர்களுடைய சுற்றுச் சூழல் மீது, இன்னும் கூறுவதாயின் அவர்களுடைய நண்பர்கள் மீதும் விழுகின்றது. ஏனெனில், ஏராளமான சீர்கேடுகள் தீய எண்ணத்தின் விளைவாக அலலது கோள் சொல்வதன் விளைவாக அல்லது பொறுமையின்மையின் விளைவாக அல்லது ஆவேசத்தின் விளைவாக உருவாகி விடுகின்றன. இதைத் தடுப்பதற்கு உண்மையான நேரான கூற்று மிகவும் உறுதியான ஒரு கயிறாகும்.

பிறகு அன்னார் (ரஹி) கூறினார்கள்: நான் இப்பொழுது எந்த நிக்காஹ்வை அறிவிக்கின்றேனோ அது இரு குடும்பங்களுக்கும் அருளுக்குரியதாக ஆகட்டுமாக! பிறகு, ஜமாஅத்திற்கும் அருளுக்குரியதாக ஆகட்டுமாக! மனித குலத்திற்கும் அருளுக்குரியதாக ஆகட்டுமாக! இதிலிருந்து மார்க்கத்திற்குத் தொண்டு செய்யக் கூடிய சந்ததிகள் உருவாகட்டுமாக!

பிறகு அன்னார் (ரஹி) கூறினார்கள்: இந்தத் திருமண உறவு, என் தங்கையான அமத்துல் ஹகீம் மற்றும் ஸய்யது தாவூத் முஸஃப்பர் ஷாஹ்வின் மகனான ஸய்யது மௌலூத் அஹ்மத் உடையதாகும். அது டாக்டர் ஸய்யது குலாம் முஜ்தபாவின் மகள் லுப்னா ஷஹ்பாஸ் உடன் முடிவாகிறது. பிறகு டாக்டர் ஸாஹிப் தொடர்பாகவும் அன்னார் கூறினார்கள்:

டாக்டர் ஸாஹிப் அவர்கள் மேற்கு ஆஃப்ரிக்காவில் வாழ்வை அர்ப்பணித்த மருத்துவராகப் பணியாற்றிய ஆரம்ப கால மருத்துவர்களில் ஒருவர் ஆவார்கள். இவர் வெற்றிகரமான அறுவை சிகிச்சை நிபுணராக முதலில் கானாவில் பணியாற்றி வந்தார்கள். சிலகாலம் கழித்து இவர்களை நைஜீரியாவுக்கு அனுப்பி வைக்கபட்டது. அங்கும் இவர்கள் தம்முடைய தற்காலிக வக்ஃபை நிறைவேற்றினார்கள். பின்னர் இதய நோயால் பாதிக்கப்பட்டு அதனால் திரும்பி வர வேண்டி வந்தது.

பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவர்களுக்காக இவ்வாறு துஆவும் செய்தார்கள்: எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களை ஆரோக்கியத்துடன் வைப்பானாக! மீண்டும் இவர்கள் ஆஃப்ரிக்கா செல்லும் நல்வாய்ப்பை இவர்களுக்கு வழங்குவானாக!

இந்த துஆவையும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். இதற்குப் பிறகும் இவர்கள் சென்றார்கள். மேலும் ஒரு நீண்ட காலம் மீண்டும் ஆஃப்ரிக்காவில் இவர்களுக்குத் தொண்டாற்ற நற்பேறு கிடைத்தது.

பிறகு, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள், எல்லாம் வல்ல அல்லாஹ் ஸய்யது மௌலூத் அஹ்மதுக்கும் மார்க்கத் தொண்டிற்கான நற்பேறை வழங்குவானாக! என்ற துஆவையும் செய்தார்கள். இதற்குப் பிறகு, தம்மால் செய்ய முடிந்த தன்னார்வத் தொண்டுகளை இவர்கள் ஆற்றினார்கள்.

இவர்களின் மகன் ஸய்யித் ஸஃஊத் அஹ்மத் கூறுகிறார்: என் தந்தை துவக்கதிலிருந்தே தொழுகைகளைப் பேணக் கூடியவராகவும், ஃபஜர் தொழுகைக்குப் பிறகு திலாவத் செய்யக் கூடியவராகவும் இன்னும் கூறுவதாயின் தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருந்தார்கள். எனக்குத் தெரியும்.

இவர்களுடைய திலாவத்தும் மிகவும் அழகிய குரலில் இருந்ததாகக் கூறிவந்தார்கள். பிறகு இவ்வாறு கூறி வந்தார்கள்: இரவு உறங்குவதற்கு முன்பு எங்களுக்குப் பழைய சான்றோர்களின் கதைகள் மற்றும் சம்பவங்களைக் கூறுவார்கள். சந்தாக்கள் செலுத்துவதில் முறையாக இருந்தார்கள். எங்களையும் சந்தாக்களை முறையாக செலுத்தும்படி வலியுறுத்தி வந்தார்கள். செலவுக்குப் பணம் கொடுத்தாலும் முதலில் சந்தா கொடுத்து வாருங்கள் என்று கூறுவார்கள். ஈது பணம் கிடைத்தாலும் அதிலும் சந்தா கொடுங்கள் என்று கூறுவார்கள்.

ஒவ்வொருவருக்கும் எனத் தனித்தனி ஃபைலை உருவாக்கி வைத்திருந்தார்கள். அதேபோன்று பிள்ளைகளை வஸிய்யத் செய்ய வைத்தபோது, அவர்களுக்கும் ஃபைல் தயார் செய்ய வைத்தார்கள். தம்முடைய பதிவுகளையும் வைத்தார்கள். ஒவ்வொரு சந்தாவையும் தாமே நிறைவேற்றி வந்தார்கள். ரமலான் நோன்புகள் மட்டுமின்றி ஷவ்வால் உடைய நோன்புகளையும் வைத்து வந்தார்கள். ரமலானில் திருக்குர்ஆனை இரண்டு முறை முழுவதும் ஓதி முடித்து விடுவார்கள். பிறகு, மூன்றாவது முறை ஓதி முடிப்பதற்கு முயற்சி செய்வார்கள்.

மகன் எழுதியுள்ளார்: இவர்கள் கள்ளம் கபடமற்ற மனிதராக இருந்தார்கள். மிகவும் தெளிவான தன்மைக்குச் சொந்தக்காரராக, நேரான உண்மையான விஷயத்தைப் பேசக் கூடியவராக இருந்தார்கள். மிகவும் நன்கு பழகக் கூடியவராக இருந்தார்கள். யாருடனாவது பழைய தொடர்பு இருக்கும். அல்லது தாமே புதிய தொடர்பு வைத்துக் கொள்வார்கள். ஏதாவது ஒரு சாக்கை வைத்துக் கொண்டு நலம் விசாரித்துக் கொண்டே இருப்பார்கள். சிறியவர், பெரியவர் என அனைவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். தமது உள்ளத்தில் ஒருபோதும் எவரைப் பற்றியும் உள்ளப் பகைமையை வைத்திருக்கவில்லை. காழ்ப்புணர்ச்சி இருக்கவில்லை. ஒருவர் எவ்வளவு அதிகம் வரம்பு மீறி நடந்து கொண்டு விட்டிருந்தாலும் சரி; ஆனால் இவர்கள் எப்பொழுதும் நல்ல முறையில் நடந்து வந்தார்கள். ஒருவர் அதிகம் வரம்பு மீறி நடந்திருந்தார் என்றால் தாமே சென்று அவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

இதை மகன் மட்டும் எழுதியிருக்கவில்லை. அதையும் தாண்டி நானும் பார்த்திருக்கின்றேன். உண்மையில், இந்த சிறப்புகள் அவரிடம் இருந்தன. நானும் இதையே பார்த்துள்ளேன். இவர்களை அறிந்திருந்த இரங்கல் தெரிவிக்கக் கூடிய பலரும் கூட, உண்மையில் இந்த சிறப்புகள் இவர்களிடம் இருந்தன என்று எழுதியுள்ளனர்.

பிறகு மகனே எழுதியுள்ளார்:

ஒருமுறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எங்கோ பயணத்தில் சென்று இருந்தார்கள். இவர்களுக்காக விளையாட்டுப் பொருள் ஒன்றை அன்பளிப்பாக வாங்கி வந்தார்கள். அதை இவர்கள் திறந்து தனித்தனியாக ஆக்கி விட்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவர்களிடம், நான் உமக்கு அன்பளிப்பு கொடுத்தேன். நீர் அதை தனித்தனியாக ஆக்கி விட்டீரே! என்று கூறினார்கள். அதற்கு இவர்கள், இதோ ! நான் இப்பொழுதே சேர்த்து விடுகின்றேன் என்று கூறினார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவருடைய தாயாரிடம், இவரை இன்ஜீனியர் ஆக்குங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடைய இந்தக் கூற்றும் நிறைவேறியது. இவர்கள் பிறகு இன்ஜீனியராகவும் ஆகிவிட்டார்கள். மேலும், மிகவும் சிறந்த இன்ஜினியராக இருந்தார்கள். பிறகு அனைவருக்கும் பயனிக்கக் கூடிய ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஓர் அறிவுரையை எடுத்துக் கூறிவிடுகின்றேன்.

ஒருமுறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தம்முடைய பண்ணைக்கு, சிந்து மாகாணத்தில் இருந்த நிலங்களுக்கு சென்றிருந்தார்கள். அந்த நாட்களில் இவர்களும் அங்குதான் இருந்தார்கள். இவர்களும் தம் தந்தையுடன் இருந்தார்கள்.

அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடன் நிலங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள். சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது இவர்களும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். அப்பொழுது அநேகமாக மாம்பழங்களின் பருவ காலமாக இருந்தது. இப்பொழுது தோட்டத்தினுடைய பழங்களை குத்தகை எடுத்தவர் பறித்து கீழே வைத்திருந்தார். தோட்டம் குத்தகைக்கு கொடுக்கப்படுகிறது.பின்னர் அந்தப் பழங்களும் குத்தகைக்காரர்களுக்கு சொந்தமானவையாக இருக்கின்றன.எனினும், அவற்றிலிருந்து எஜமானருக்கான சிறிது வகைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால், எவ்வாறு இருப்பினும், குத்தகை எடுத்தவர் தன்னுடைய பழங்களைப் பறித்து வைத்திருந்தார். இவர்கள் சிறு பிள்ளையாக இருந்தார்கள். இவர்கள் இதிலிருந்து ஒரு மாம்பழத்தை எடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: திருப்பி வைத்து விட்டு வாருங்கள். இது இப்பொழுது உங்களுக்கு சொந்தமானதல்ல. இது குத்தகைக்காரருக்கு சொந்தமானது ஆகும்.

ஆக, இதுதான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கும் தர்பிய்யத் வழங்கும் பாணியாக இருந்தது. எங்களுக்கு ஒருவகை கிடைக்கும்; அதில் கழிந்து விடும். பரவாயில்லை என்று கூறியிருக்கலாம். ஆனால், இல்லை! தம் மகள் வழிப் பேரருக்கு அன்னார் (ரலி) இவ்வாறு தர்பிய்யத் வழங்கினார்கள்.

பிறகு, ஸய்யித் மௌலூத் அவர்களின் மகள் அன்பிற்குரிய மாரியா கூறுகின்றார்: திருக்குர்ஆன், ரூஹானி கஸாயின் மற்றும் மல்ஃபூஸாத் ஆகியவற்றை தொடர்ந்து படித்து வந்தார்கள். இதைப் போன்றே தஃப்ஸீரே கபீரையும் படித்து வந்தார்கள் என்பதும் எனக்கு தெரியும். மிகவும் ஆழ்ந்த ஞானத்தைக் கொண்டிருந்தார்கள்.

மக்கள் மத்தியில் அமர்ந்து தமது அறிவை வெளிப்படுத்த மாட்டார்கள். ஆனால், ஏதாவது விவகாரத்தைக் குறித்து விஷயத்தைக் குறித்து யாராவது கேட்டால் மிகவும் நல்ல சான்றுகளைத் தருவார்கள். இந்த விஷயத்தை மற்றவர்களும் எனக்கு எழுதியுள்ளார்கள்.

மகள் கூறுகின்றார்: மார்க்க மற்றும் உலக ரீதியாக நாங்கள் எப்பொழுது ஏதேனும் விவகாரம் கேட்டாலும் நல்ல தீர்வு கூறுவார்கள். துஆக்கள் பக்கம் கவனம் செலுத்துமாறு வலியுறுத்தி வந்தார்கள். நீங்கள் துஆ செய்யுங்கள். பிறகு விவகாரத்தை அல்லாஹ்விடம் விட்டு விடுங்கள் என்றே கூறிவந்தார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய மனைவி மக்களைப் பாதுகாப்பானாக! இவர்கள் செய்த நன்மைகளைத் தொடர்வதற்கான நற்பேறை வழங்குவானாக!

இவர்களில் ஒரு சகோதரர் ஸய்யித் ஸாஹிப் ஆவார். அவரும் இதைத் தான் எழுதியிருக்கின்றார்: இவர்களின் ஒரு பெரிய சிறப்பு என்னவாக இருந்தது என்றால், மகிழ்ச்சியின் தருணமோ அல்லது துக்கத்தின் தருணமோ எப்பொழுதும் இவர்கள் முந்திக் கொள்வார்கள். வாழ்த்துக்கள் தெரிவிப்பதாகட்டும்; அல்லது நோயாளியாக இருந்தால் நலம் விசாரிப்பதற்கு எல்லாருக்கும் முதலாக வருவார்கள்.

ஹனீஃப் மஹ்மூத் ஸாஹிப்; இவர்கள் இயக்கத்தின் முரப்பி ஆவார்கள். இவர்கள் எழுதுகின்றார்கள்: இஸ்லாமாபாதில் இருந்து இவர்களுடன் அறிமுகம் ஏற்பட்டது.இவர் ஓர் எளிய வெள்ளை உடை அணிந்த அமைதியான இயல்பைக் கொண்ட ஏழ்மை மற்றும் வானவப் பண்பு கொண்ட மனிதராக இருந்தார்கள். வாழ்வை அர்ப்பணித்தவர்கள். அதுவும் குறிப்பாக முரப்பிமார்களை மிகவும் மதித்து வந்தார்கள். இஸ்லாமாபாதில் ஏற்பட்ட தொடர்பை இங்கு ரப்வா வந்த பிறகும் பேணி வந்தார்கள். பெரும்பாலும் பள்ளிவாசலில் தேடி வந்து சந்திப்பார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்களிடம் துஆவிற்காக எப்பொழுது கூறப்பட்டாலும் துஆ செய்த பிறகு என்ன ஆனது? என்று அந்த நிலை குறித்தும் கேட்டு வந்தார்கள்.

நான் கூறியதுபோன்று எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களுடைய பிள்ளைகளிடமும் இந்த நற்செயல்களைத் தொடரச் செய்வானாக! அடுத்து, நான் தொழ வைக்கப் போகும் இரண்டாவது ஜனாஸா யாருடையதோ இது அவர்களைப் பற்றிய குறிப்பு ஆகும். மதிப்பிற்குரிய அக்மீது ஆஃக் முஹம்மது ஸாஹிப். இவரகள் புர்கினாஃபாஸோவின் டோரி மண்டலத்தின் மஹ்தியாபாதின் ஜமாஅத் தலைவர் ஆவார்கள்.இவர்கள் கடந்த நாட்களில் 65 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்கள் பின் விட்டுச் சென்றவர்களில் இரண்டு மனைவிகள், 10 மகன்கள் மற்றும் ஐந்து மகள்கள் இருக்கின்றார்கள். மிஷனரீ இன்ஜார்ஜ் ஸாஹிப் எழுதுகிறார்கள்: மிகவும் ஆற்றல் மிக்கவராக இருந்தார்கள். கடந்த நாட்களில் நான் அங்கு டோரீக்கு சென்று இருந்தேன். உயிர் தியாகிகளின் குடும்பத்தினரை அவர்களுடைய வீடுகளில் தாமே குடியமர வைத்து ஏற்பாடுகளை செய்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஜமாஅத் புதிய வீடுகளைக் கட்டிக் கொடுத்தது. ஷஹீதுமார்களை அங்கு குடியமர வைத்துக் கொண்டிருந்தார்கள். பின்னர், இரண்டு நாட்கள் கழித்துதான் தமது வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு இவர்கள் மயங்கி விழுந்தார்கள். கடுமையான மாரடைப்பு ஏற்பட்டது. பிறகு இவர்கள் மரணமடைந்து விட்டார்கள். இவர்களுக்கு 1999-இல் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பேறு கிடைத்தது. அஹ்மதியான பிறகு அல்ஹாஜ் இப்ராஹிம் பித்கா ஸாஹிப் அவர்களுக்கு அருகில் மஹ்மதியாபாதுக்கு குடிபெயர்ந்து விட்டார்கள். மேலும், அல்ஹாஜ் இப்ராஹிம் பித்கா ஸாஹிப் அவர்களுடன் அருகில் உள்ள கிராமங்களுக்கு தப்ஃலீக்காகவும் சென்று வந்தார்கள். தப்லீஃகின் விளைவால் இவர்கள் பல ஜமாஅத்துகளை உருவாக்கினார்கள்.

வனத்துறையில் வனக் காவலரின் பிரதிநிதியாக அரசு ஊழியராக இருந்தார்கள். அங்கு தீவிரவாதத்தின் காரணமாக வேலையை விட்டு விட்டார்கள். விளைச்சல் அறுவடை செய்யும்பொழுது, அனைத்து சகோதரர்களிடம் இருந்தும் அவர்களுடைய விளைச்சலிருந்து ஸகாத்துக்கான தொகையை தனியாக எடுத்து வைப்பார்கள். மேலும் தமது ஸகாத்தைக் கணக்கிட்டு பொருளாதார செயலாளரிடம் கொடுத்து ரசீது போடச் செய்வார்கள்.

ஐந்து ஆண்டுகள் மஹ்மதியாபாத் ஜமாஅத்தின் சத்ராகத் தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். மென்மையான மற்றும் மெல்லிய இயல்பைக் கொண்ட மனிதராக இருந்தார்கள். ஒருபோதும் கோபப்பட மாட்டார்கள். ஜனவரி 11, 2023 அன்று மஹ்தியாபாதில் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்தபோது அன்று இவர்கள் மக்ரிப் தொழுதுவிட்டு வீட்டுக்குச் சென்று விட்டிருந்தார்கள். அந்த சம்பவத்திற்குப் பிறகு ஜமாஅத் மக்களிடத்தில் மிகவும் அச்சமும், திகிலும் ஏற்பட்டிருந்தது. ஷஹாதத்துகளின் காரணமாக மக்கள் மிகவும் கனைத்தும் இருந்தார்கள். இவர்கள் அவர்களுக்கு மிகவும் துணிச்சலூட்டி வந்தார்கள். பிறகு மீண்டும் நான் இவர்களிடம், மஹ்தியாபாத் மக்களை டோரீ நகரத்திற்கு இடம் மாற்றி விடுங்கள் என்று கூறியபோது கடுமையாக உழைத்து இவர்கள் அனைத்துப் பணிகளையும் செய்தார்கள்.

மக்களுக்கும் துணிச்சலூட்டினார்கள். அவர்களைக் குடியமரச் செய்தார்கள். ஜமாஅத் மக்கள் அனைவரையும் தமது கண்காணிப்பில் டோரீக்கு மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்தார்கள். பிறகு மரணம் வரை அந்தத் உயிர்த் தியாகிகள் அனைவரின் குடும்பங்களின் தேவைகளை கவனித்து வந்தார்கள்.

டோரீயின் முபல்லிஃக்கான ராணா ஃபாரூக் ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஃபஜர் தொழுகைக்குப் பிறகு தினமும் அனைத்து உயிர்த் தியாகிகளின் குடும்பங்களிடம் ஸலாம் கூறச் செல்வார்கள். நலம் விசாரிப்பார்கள். ஏதேனும் பிரச்சனை இருந்தது என்றால், அதை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு முயற்சி செய்வார்கள். இப்பொழுது டோரீயில் பல்வேறு ஜமாஅத்துகளின் பாதிக்கப்பட்டவர்கள் ஏறக்குறைய 800 பேர் அங்கு தங்கி இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் கவனித்துக் கொள்வார்கள். எல்லா நேரமும் அவர்களுக்குத் தொண்டு செய்வதற்கு ஆயத்தமாக இருந்தார்கள்.

தொழுகைகளை முறையாக பேணக் கூடியவராகவும், ஜமாஅத் அமைப்பிற்கு முழுவதுமாக ஒத்துழைப்பவராகவும் மற்றவர்களுக்கு இதற்காக வலியுறுத்தக் கூடியவராகவும் இருந்து வந்தார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கி இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக!இவர்களின் சந்ததிகளுக்கும் இவர்களுடன் தொடர்பு வைத்திருப்பவர்களுக்கும் பொறுமை மற்றும் மன தைரியத்தை வழங்குவானாக! இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நற்பேறை வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * *

# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீத் திட்டத்தின் 66-வது ஆண்டில் ஜமாஅத் உறுப்பினர்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட பொருள் தியாகங்களைக் குறித்த நற்குறிப்புகள் & 67-வது ஆண்டின் துவக்கத்திற்கான அறிவிப்பு & பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தூய அஹ்மதிகளின் பொருள் தியாகங்களைக் குறித்த நற்குறிப்புகள்**

வக்ஃபே ஜதீதுடைய 67-ம் ஆண்டில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஒரு கோடியே இருபத்தி ஒன்பது லட்சத்து நாற்பத்தி ஓராயிரம் பவுண்ட் பொருளாதார தியாகம் செய்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. இந்த வசூல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது ஏழு லட்சத்து பதினெட்டாயிரம் பவுண்ட் அதிகம் ஆகும்

இஸ்லாத்தின் போதனையை பரப்புவதற்காக எழுதுகோல் ஜிஹாதும், தப்லீஃக் ஜிஹாதும் நடைபெற்று வருகின்றது. மேலும், இஸ்லாத்தின் துவக்கத்தில் தியாகங்களுக்கான தேவை இருந்ததைப் போன்று இந்த ஜிஹாதை தொடர்ந்து நடைபெறுவதற்காகவும் உயிர், செல்வம் மற்றும் கண்ணியத்தை தியாகம் செய்வதற்கு தேவை உள்ளது

மார்க்கத்தைப் பரப்புவதற்காக செய்யப்படும் தியாகங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிமுறையும் வெற்றிக்கரமான வணிகமும் ஆகும். கருமித்தனத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.இந்தக் கருமித்தனம்தான் முந்தைய சமுதாயங்களின் அழிவிற்குள்ளாக்கியது

**பாலஸ்தீனத்தின் அப்பாவி முஸ்லிம்களுக்காக துஆ செய்வதற்கு தொடர் அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 ஜனவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **05ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ
تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ ⑪
تُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَرَسُوْلِهٖ
وَتُجَاهِدُوْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ بِاَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ
ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ ⑫
يَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ وَيُدْخِلْكُمْ جَنّٰتٍ
تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ وَمَسٰكِنَ طَيِّبَةً فِيْ جَنّٰتِ عَدْنٍ
ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ ⑬

இந்த வசனங்களின் பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! வேதனையளிக்கக் கூடிய ஒரு தண்டனையிலிருந்து உங்களைக் காப்பாற்றும் வாணிபம் ஒன்றைக் குறித்து நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?

நீங்கள் அல்லாஹ்விடத்தும் அவனது தூதரிடத்தும் நம்பிக்கை கொண்டு உங்கள் பொருள்களையும் உங்கள் உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் வழியில் கடுமையாக உழைப்பதே (அந்த வாணிபம்) ஆகும். நீங்கள் அறிந்திருப்பின் இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.

(நீங்கள் அவ்வாறு செய்தால்) அவன் உங்கள் பாவங்களை மன்னித்து, உங்களை சுவர்க்கங்களில் நுழையச் செய்வான். அவற்றிற்கிடையே ஆறுகள் ஓடுகின்றன. சுவர்க்கங்களிலுள்ள தூய்மையானதும், இன்பமானதுமான இருப்பிடங்களில் (அவன் உங்களை அமர்த்துவான்) இது (அவன் உங்களுக்கு அளிக்கும்) மாபெரும் வெற்றியாகும்.(61: 11 -13)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள்: நானும் மூஸவிய்ய மஸீஹின் அடிச்சுவட்டில் அனுப்பப்பட்டுள்ளேன். எவ்வாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கருணை மற்றும் மன்னிப்பின் போதனையை வழங்கினார்களோ அவ்வாறே நானும், கருணை மன்னிப்பு, சமரசம் மற்றும் சமாதானம் எனும் இஸ்லாமியப் போதனையுடன் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் நான் மார்க்கப் போர்களை தடுத்து நிறுத்துவதற்காக வந்துள்ளேன். இந்தக் காலம் இப்பொழுது திருக்குர்ஆனின் போதனைகளைப் பரப்புவதற்கான காலமாகும். இப்பொழுது வாளைக் கொண்டு போர் புரியும் காலமல்ல. ஆனால், இஸ்லாமியப் போதனையைப் பரப்புவதற்காக எழுதுகோலால் செய்யப்படும் போர் மற்றும் தப்லீஃக் எனும் போர் ஆகியவை தொடர்கின்றன.

இஸ்லாத்தின் துவக்கத்தில் தியாகங்களுக்கான தேவை இருந்தது போன்றே இந்தப் போரைத் தொடரச் செய்வதற்காகவும் உயிர், பொருள், நேரம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றை தியாகம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. இந்தக் காலத்தில் சமூக ரீதியில் மேன்மையைப் பெறுவதற்காக உலகத்தில் மிகவும் அதிகமாக முயற்சி செய்யப்படுகிறது. மார்கத்தையோ மக்கள் மறந்து விட்டார்கள். உலகத்தின் பக்கம் அதிகம் ஆர்வம் கொள்கிறார்கள்.

வாணிபங்களில் மேன்மையும் உலக சுகபோகங்களையும் பெறுவதற்காக உலகம் தனது கவனத்தை அதன் உச்சத்தை எட்டச் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. இத்தகைய நிலையில் மார்க்கத்தைப் பரப்புவதற்காகத் தியாகங்கள் செய்வதே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியும் வெற்றிகரமான வாணிபமும் ஆகும். இதைப் பற்றிதான் அல்லாஹ் கூறியிருக்கின்றான்.

இதைத் தான் நான் ஓதிய வசனங்களில் எல்லாம் வல்ல அல்லாஹ் கூறியிருக்கின்றான். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உடைய காலமான இந்தக் காலத்தில் குறிப்பாக பொருள் தியாகம் ஒரு முக்கியமான பணியாகும். பிறகு இதிலிருந்து ஆன்மாவைத் தியாகம் செய்வதற்கான எழுச்சியும் ஏற்படுகின்றது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்தியும், நெருக்கமும் கூட கிடைக்கின்றது. எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளான். ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَا لَكُمْ اَلَّا تُنْفِقُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ

பொருள்: உங்களுக்கு என்ன ஆயிற்று! ஏன் நீங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதில்லை.

(அல் ஹதீத்: 11)

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்: அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தே வருகின்றது. அவன் உங்களுக்கு வழங்குகின்றான். பிறகு நீங்கள் நற்கூலி பெறுவதற்காக உங்களை அவனுடைய வழியில் செலவு செய்யக் கூறுகின்றான். எனவே ஈமான் இருக்கின்றது என்றால் அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை இருக்கின்றது என்றால் அவனுடைய வழியில் தியாகங்கள் செய்ய வேண்டும் என்பதை அது எதிர்பார்க்கின்றது.

பிறகு ஓரிடத்தில் எச்சரிக்கை விடுத்தவாறு எல்லாம் வல்ல அல்லாஹ்


**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

கூறுகின்றான்:

وَ اَنۡفِقُوۡا فِیۡ سَبِیۡلِ اللّٰہِ وَ لَا تُلۡقُوۡا بِاَیۡدِیۡکُمۡ اِلَی التَّہۡلُکَۃِ

பொருள்: மேலும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள். மேலும் உங்களுடைய கைகளாலேயே உங்களை அழிவில் இட்டுக் கொள்ளாதீர்கள். (2:196)

எனவே அல்லாஹ்வின் வழியில் அவன் வழங்கியுள்ள செல்வத்திலிருந்து செலவு செய்யாதவர்கள் தம்மைத் தாமே அழிவில் இட்டுக் கொள்கிறார்கள். இன்றைய நாள்களில் இந்தப் பொருள் போர்தான் ஆன்மாவின் போருக்கும் வழிவகுக்கின்றது. மனிதன் தன்னுடைய பல ஆசைகளை முதுகுக்குப்பின் எறிந்து விட்டு மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காக தியாகங்கள் செய்கிறான். எனவே இது ஆன்மாவின் போராகும். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருட்களை ஈர்த்தவாறு அவனையும் அவனுடைய சந்ததிகளையும் எண்ணற்ற அருட்களுக்கு வாரிசாக்கி விடுகின்றது.

எல்லாம் வல்ல அல்லாஹ் யாருக்கும் கடன் வைத்திருப்பதில்லை. எல்லாம் வல்ல அல்லாஹ் எத்தகைய வாணிபத்தைப் பற்றி தெரிவித்துள்ளான் என்றால், அது உலகம் மற்றும் மறுமையின் பலன்களுக்கு வழிவகுக்கும். மேலும், தண்டனையிலிருந்து காப்பாற்றக் கூடிய வாணிபமாகும். உலக வாணிபங்களோ வெறும் உலகப் பலன்களுக்காக உள்ளன. ஆனால், எல்லாம் வல்ல அல்லாஹ்வுடன் செய்துள்ள வாணிபம் உலகம் மற்றும் மறுமை ஆகிய இரண்டின் அருட்கொடைகளுக்கு உரியவராக ஆக்கி விடுகின்றது. நான் கூறியது போன்று எல்லாம் வல்ல அல்லாஹ் யாருக்கும் கடன் வைத்திருப்பதில்லை. நல்ல எண்ணத்துடன் அவனுடைய வழியில் செய்யப்பட்ட தியாகத்தை அவன் பன்மடங்கு அதிகரித்து தருகின்றான். எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறுகின்றான்.

وَ مَثَلُ الَّذِیۡنَ یُنۡفِقُوۡنَ اَمۡوَالَہُمُ ابۡتِغَآءَ مَرۡضَاتِ اللّٰہِ
وَ تَثۡبِیۡتًا مِّنۡ اَنۡفُسِہِمۡ کَمَثَلِ جَنَّۃٍۭ
بِرَبۡوَۃٍ اَصَابَہَا وَابِلٌ فَاٰتَتۡ اُکُلَہَا
ضِعۡفَیۡنِ ۚ فَاِنۡ لَّمۡ یُصِبۡہَا وَابِلٌ فَطَلٌّ ؕ وَ اللّٰہُ بِمَا تَعۡمَلُوۡنَ بَصِیۡرٌ

பொருள்: தங்களுடைய செல்வங்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும், தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவர்களின் உதாரணம், உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பொழியும்போது, அது தனது கனியை இரு மடங்காகத் தருகிறது. மேலும் அதன் மீது பெருமழை பெய்யவில்லையாயினும், மிகவும் குறைவான மழையே (அதற்குப் போதுமானது). மேலும் நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.(2:266)

இன்று எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் தான் மார்க்கத்திற்காகப் பொருள் தியாகம் செய்வதன் முக்கியத்துவத்தைப் புரிகின்றார்கள். இவர்கள் குறை மழையைப் போன்று சிறிது சிறிதான தொகையையும் கொடுக்கின்றார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவற்றை அளவற்ற கனிகளாக்கி விடுகின்றான். ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் இதற்கான சாட்சிகளே ஆகும்.

ஏழை மக்கள் ஆவார்கள். இவர்கள் எளிய தியாகம் செய்கிறார்கள். பிறகு எல்லாம் வல்ல அல்லாஹ் அளவற்ற கனிகளாக ஆக்கி விடுகின்றான். குறிப்பாக, ஏழை அஹ்மதிகள் மற்றும் சிறதிதளவு வழிவகைகள் கொண்டிருக்கக் கூடிய அஹ்மதிகள் பொதுவாக அதிகமாக தியாகம் செய்பவர்களாக காணப்பட்டுள்ளார்கள். இதற்கான எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. நான் அவ்வப்போது எடுத்துரைத்தும் வருகிறேன். இன்றும் எடுத்துரைப்பேன். இந்த உதாரணங்கள் அதிகம் வசதிபடைத்த அஹ்மதிகள் அவர்களுடைய தரம் என்ன? என்று பார்ப்பதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டக் கூடியவையாக இருக்க வேண்டும்.

ஏழை அஹ்மதியோ தனது பொருள் தியாகத்தை செய்யும் போது, அவர் தனது ஆன்மா மற்றும் தனது உயிரைக் கொண்டு போர் செய்பவராக இருக்கின்றார். ஆஃப்ரிக்காவில் தியாகம் செய்யக் கூடியவர்களில் எண்ணற்ற மக்கள் எத்தகைய அஹ்மதிகள் என்றால், பாகிஸ்தானிலும் அப்படிப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். இந்தியாவிலும் அப்படிப்பட்டவர்கள் இருக்கின்றார்கள்.

அவர்கள் தமது உணவைத் தியாகம் செய்து, பசியோடு இருந்து பொருள் தியாகம் செய்கிறார்கள். தாம் அல்லது தம்முடைய பிள்ளைகள் நோய்வாய்ப்படும்போது, மருந்துகளில் செலவு செய்வதற்கு பதிலாக, சந்தா செலுத்துவதற்கு முன்னுரிமை செய்கின்றார்கள். பிறகு, எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்கள் செய்த அந்தத் தியாகத்திற்கு அருளாமல் விடுவதில்லை.

இன்னும் கூறுவதாயின், சிலவேளைகளில் எவ்வளவு விரைவில் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள்களுக்கு அவர்கள் வாரிசுகளாகி விடுகின்றார்கள் என்றால் வியப்பு ஏற்படுகிறது. மேலும், இந்த விஷயம் அவர்களுக்கு ஈமானின் முன்னேறத்திற்கான காரணியாக அமைகிறது. எனவே எல்லாம் வல்ல அல்லாஹ் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட தியாகத்துக்கு அருளுவதில்லை என்ற விஷயம் ஒருபோதும் எந்தவொரு பலவீனமான அஹ்மதியின் உள்ளத்திலும் வந்து விடக் கூடாது.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருவூலங்கள் எல்லையற்றவை. அவனுக்கு நம்முடைய சில ரூபாய்களின் தேவையில்லை. எல்லாம் வல்ல அல்லாஹ் கேட்கும் இந்தத் தியாகங்கள் மூலமாகவோ அவன் நம்மை மேற்கொண்டு அருட்களுக்கு உரியவர்களாக ஆக்குவதற்காக சந்தர்ப்பம் வழங்குகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தில் தியாகத்திற்கான இந்த உணர்வை எந்த அளவு உருவாக்கியிருக்கின்றார்கள் என்றால், அன்னாருடைய காலத்தில் இருந்து இன்று வரை ஜமாஅத் மக்கள் தம்முடைய தேவைகளை முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டு ஜமாஅத்தின் தேவைகளுக்காகத் தம்முடைய தியாகங்களை முன் வைக்கும் இந்தக் காட்சிகள் நமக்குத் தென்படுகின்றன. மேலும்,இதுவே முன்னேற்றம் அடையக் கூடிய சமுதாயங்களின் வழிமுறையாகும். இதன் மூலமாகவே பிறகு எல்லாம் வல்ல அல்லாஹ் அருளும் புரிகின்றான்.

ஏற்றுக் கொள்ளக் கூடிய இந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டலான பாதி பேரீத்தம் பழத்தை மட்டுமே செலவிடுவதற்கான ஆற்றல் இருந்தாலும் சரி நெருப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்! என்ற விஷயத்தைப் பற்றிய புரிதலை உடையவர்கள் ஆவார்கள். பாதி பேரீத்தம் பழத்தைத்தான் உங்களால் கொடுக்க முடியும் என்றாலும் அதைக் கொடுத்து நெருப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

பிறகு, அன்னார் கூறினார்கள்: கருமித்தனத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். இந்தக் கருமித்தனம் தான் முந்தைய சமுதாயங்களை அழித்து விட்டது. ஸஹாபா பெருமக்களின் நிலை எப்படி இருந்தது என்றால், அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எப்பொழுது பொருள் தியாகம் செய்யுமாறு கூறினாலும் சரி நாங்கள் சந்தைக்கு செல்வோம். கூலி வேலை செய்வோம். சிறிதளவு ஏதாவது கூலி கிடைத்தாலும் அந்த வருமானத்தைக் கொண்டு வந்து பெருமானார் (ஸல்) அவர்களின் மேலான அவையில் சமர்ப்பித்து விடுவோம்.

இதுபோன்றே தியாகங்கள் செய்பவர்களை எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் உண்மைத் தொண்டருக்கும் வழங்கியுள்ளான். அவர்களின் எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. வரலாற்றில் எத்தகைய சகோதரர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர்கள் வியப்படையும் வகையிலான தியாகங்கள் செய்துள்ளனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அவர்களைப் பற்றி கூறியிருக்கின்றார்கள்:

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் எனது ஜமாஅத்தின் அன்பு மற்றும் களங்கமற்றத் தன்மையைக் கண்டு வியப்படைகின்றேன்! அவர்களில் மிகவும் குறைவான வருமானத்தை உடையவர்கள்; உதாரணமாக, மியான் ஜமாலுத்தீன், கைருத்தின் மற்றும் இமாமுத்தீன் காஷ்மீரி ஆகியோர் எனது கிராமத்துக்கு அருகில் வசிக்கக் கூடியவர்கள் ஆவர். அவர்கள் மூவரும் ஏழை சகோதரர்கள் ஆவர். அவர்கள் மூன்று அனாக்கள் அல்லது நான்கு அனாக்களைத் தினக்கூலிக்கு வேலை செய்து சம்பாதிக்கின்றார்கள். ஆனால், அவர்கள் மாதாந்திர சந்தா செலுத்துவதில் தீவிரமாக பங்கெடுக்கின்றனர். அவர்களது நண்பரான கிராமப் பதிவாளர் மியான் அப்துல் அஸீஸின் களங்கமற்றத் தன்மையைக் கண்டு எனக்கு வியப்பு ஏற்படுகிறது. அவர் வாழ்வாதாரம் குறைவாக இருந்தும் கூட இறைவழியல் செலவாக வேண்டும் என்று தான் விரும்புவதாகக் கூறி ஒருநாள் 100 ரூபாய் கொடுத்துச் சென்றார்.இந்த ஏழை மனிதர் அந்த 100 ரூபாயைப் பல வருடங்களாக ஒன்று சேர்த்திருப்பார். ஆனால், இறைவனுக்காகவே இருந்த உணர்வானது இறைவனின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற உணர்வைத் தூண்டியது.

எனவே ஜமாஅத்தின் வரலாற்றில் இந்தத் தியாகம் செய்யக் கூடியவர்களின் பெயர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இறைவனின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற ஒரு குறிப்பான உத்வேகம் கொண்டிருந்த இந்த மக்கள் சாதாரண தியாகங்களை செய்திருந்தாலும் சரி அல்லது அதிகமான தியாகங்களை செய்திருந்தாலும் சரி அவர்களின் பெயர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்



**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 29 FEB 2024 Issue No. 9

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(அலை) அவர்கள் மேற்கொண்ட பணியின் உதவியாளர்களில் இணைந்து விட்டது. வரலாறு பாதுகாத்து விட்டது.

இன்னொரு சான்றோரைப் பற்றியும் கூறி விடுகின்றேன். இவர்கள் இயலாதவராகவும் ஏழையாகவும் இருந்தார்கள். இவர்களின் பெயர் ஹாஃபிழ் முயீனுத்தீன் ஸாஹிப் ஆகும். இயக்கத்துக்குத் தொண்டு செய்ய வேண்டும்; அதற்காக தியாகம் செய்ய வேண்டும் என்ற பெரும் உத்வேகம் இவர்களுடைய இயல்பில் இருந்தது. ஆனால், இவர்களோ பெரும் நெருக்கடியில் வாழ்வைக் கழித்து வந்தார்கள். இயலாமை காரணமாக இவர்களுக்கு எந்த வேலையும் இருக்கவில்லை.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பழைய தொண்டராகக் கருதி மக்கள் சிறிது அன்பளிப்பு வழங்கி வந்தார்கள். ஆனால், ஹாஃபிழ் ஸாஹிப் அவர்களின் வழக்கம் என்னவாக இருந்தது என்றால், அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைத்து வந்த இதுபோன்ற தொகையை ஒருபோதும் அவர்கள் தம்முடைய சொந்த செலவுகளுக்காக செலவழித்ததில்லை. மாறாக, அதை இயக்கத்துக்குத் தொண்டாற்றுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன் சமர்ப்பித்து விடுவார்கள். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தரப்பிலிருந்து ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு அதில் அவர்கள் பங்கு பெறாமல் இருந்ததில்லை. அவர்கள் ஒரு பைசா கொடுத்தாவது பங்கு பெறுவார்கள்.ஆனால், கண்டிப்பாக பங்கு பெறுவார்கள்.

அந்தக் காலத்தில் ஒரு பைசா என்பதை நீங்கள் ஒரு பீனீ அளவுக்குப் புரிந்து கொள்ளுங்கள். ஆனால், எவ்வாறு இருப்பினும் பங்கு பெறுவார்கள். அவர்களுடைய நிலைமைக்கு ஏற்ப இந்த சாதாரண தியாகமும் அசாதாரண தியாகமாக இருந்தது. சிலவேளை ஹாஃபிழ் ஸாஹிப் அவர்கள் பசித்திருந்தும் இந்தத் தொண்டை ஆற்றி வந்தார்கள். இந்த மக்களே இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்வதற்கு எந்நேரமும் ஆயத்தமாக இருந்து வந்தார்கள்.

இந்த மக்களுடைய தியாகங்களையும் அல்லாஹ் அன்போடு பார்த்தான். மேலும், இன்று அவர்களுடைய சந்ததிகளும் உண்கின்ற அந்தக் கனிகளைத் தந்தான். எனவே எவர்கள் அந்தப் பழைய சான்றோர்களின் மற்றும் ஸஹாபிகளின் சந்ததிகளோ அவர்கள் எப்பொழுதும் இந்த விஷயத்தை முன்னிறுத்த வேண்டும். அதாவது, இன்று அவர்கள் மீது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருட்கள் இருக்கின்றன என்றால், அந்த மக்களின் தியாகங்கள் காரணமாக இருக்கின்றன. எவர்களுக்கு அல்லாஹ் செழிப்பை வழங்கியுள்ளானோ அவர்கள் தம்மை சுய ஆய்பு செய்து பார்க்க வேண்டும். அவர்கள் இயக்கத்துக்குத் தொண்டாற்றுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேற்கொண்ட பணியை முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்களுடைய தியாகங்களின் தரங்கள், அவர்களுடைய சான்றோர்களுக்கு இருந்த சிந்தனைக்கான அந்த சிந்தனையாக அதிகரிக்கின்றனவா?

இன்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஏழைகளின் பெரும்பான்மை இருக்கின்றது. அது தியாகங்களின் உயர் தரத்தை நிலைநாட்டுகிறது. எனவே எவர்கள் ஜமாஅத்தில் சம்பாதியத்தின் உயர் தரத்தில் இருக்கின்றனரோ அவர்கள் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் களங்கமற்றத் தன்மையுடன் செய்யப்பட்ட தியாகத்தை மதிக்கின்றனர். உதாரணமாக, ஒரு சந்தர்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இன்று ஒரு லட்சம் திர்ஹமை ஒரு திர்ஹம் மிஞ்சி விட்டது. அது எப்படி? என்று ஸஹாபா பெருமக்கள் பணிவுடன் கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவரிடம் இரண்டு திர்ஹம்கள் இருந்தன. அவர் ஒரு திர்ஹமை தியாகம் செய்து விட்டார். மற்றொருவரிடம் எண்ணற்ற செல்வங்களும் சொத்துகளும் இருந்தன. அதிலிருந்து அவர் ஒரு இலட்சம் திர்ஹமைத் தியாகம் செய்தார்.

வெளிப்படையாகப் பார்க்கையில், இந்த ஒரு லட்சம் திர்ஹம் மிகப் பெரும் தொகையாகும். ஆனால், அந்த ஏழையின் தியாகத்தின் உணர்வுக்கு எதிரில் அந்த ஒரு லட்சம் திர்ஹமுக்கு அல்லாஹ்வின் பார்வையில் எந்த மதிப்பும் இருக்கவில்லை. எனவே எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பார்வையில் தியாகத்திற்கான தரம் உணர்வு மற்றும் எவ்வளவு பகுதி என்பதாகும். எவ்வளவு தொகை ? என்பதல்ல.

ஜமாஅத் ஏழைகளிடமிருந்து சந்தா வாங்குகிறது என்று யாரெல்லாம் கூறுகிறார்களோ இப்படியும் சில மக்கள் எனக்கு சிலவேளை எழுதிவிடுகிறார்கள். இது சரியல்ல. இந்த மக்கள் உண்மையில் உள்ளத்தில் கசப்பைக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய சொந்த உலக முன்னுரிமைகள் இருக்கின்றன. தம்முடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மற்றவர்களுடைய பெயர்களைக் கூறுகிறார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் பெரும்பான்மை இன்று தியாகம் செய்யக் கூடியதாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் தியாகங்களை முன்னிறுத்தியவாறு தாமும் தியாகம் செய்ய விரும்புகிறார்கள். சொல்லாமலேயே செய்யவும் செய்கின்றார்கள்.

ஆஃப்ரிக்காவின் தொலை தூர நாடுகளில் வாழக் கூடிய, தூய மக்கள் உலகில் இஸ்லாத்தைப் பரப்புதல் மற்றும் மார்க்கத்தின் வெற்றிக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உதவியாளர்களாக ஒத்தாசை செய்பவர்களாக ஆக விரும்புகின்றார்கள். இந்த மக்கள் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பின்வரும் வழிகாட்டலைத் தம் முன் நிறுத்தி தியாகங்கள் செய்கின்றார்கள். அதில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:


செல்வத்தையும் நேசித்து இறைவனையும் நேசிப்பது உங்களுக்கு சாத்தியமில்லை. ஒன்றை மட்டுமே நேசிக்க முடியும்.எனவே இறைவனை நேசிக்கக் கூடிய மனிதர் நற்பேறு பெற்றவராவார். உங்களில் ஒருவர் இறைவனை நேசித்து அவனது வழியில் பொருள் செலவு செய்தால் அவருடைய செல்வத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் பரக்கத் வழங்கப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனெனில், செல்வம் தானாக வருவதில்லை ; மாறாக, இறைவனுடைய நாட்டத்தால் தான் வருகின்றது. எனவே எவர் இறைவனுக்காக செல்வத்தின் சில பகுதிகளை விட்டு விடுகிறாரோ அவர் கண்டிப்பாக அதைப் பெறுவார். இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல் ஆகும். இன்றும், எவ்வாறு மக்கள் இறை வழியில் கொடுக்கின்றார்கள்: பிறகு எவ்வாறு இறைவன் அவர்களுக்கு உடனடியாகத் திருப்பிக் கொடுத்து விட்டான் என்று நாம் இதன் காட்சிகளை காண்கின்றோம்.

ஒரே இடத்தில் ஒரே பணி புரியக் கூடியவர்கள். ஆனால், அஹ்மதியின் செல்வத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ் அருளை ஏற்படுத்துகின்றான். மற்றவருக்கு அந்த பரக்கத் கிடைப்பதில்லை. பிறகு, இந்த விஷயங்கள் அவர்களுடைய ஈமான அதிகரிப்பதற்குக் காரணமாக அமைகின்றன. நான் கூறியது போன்று தூய மக்களின் சில முன்னுதாரணங்களை முன் வைக்கின்றேன்.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad